
ISBN:978-81-687272-3-6

பகுப்பும் தொகுப்பும்
முனைவர் சு இராமலிங்கம்



வல்லிக்கண்ணன்

செந்தமிழறிஞர்கள் 108

NSR 100 Educational Trust
[An ISO 9001 - 2015 Certified]
AD-13,5th Street, Anna Nagar West, Chennai - 600 040
www.nasubbureddiar100.in



அண்ணா நூற்றாண்டு நூலகம்

ANNA CENTENARY LIBRARY

DIRECTORATE OF PUBLIC LIBRARIES SCHOOL EDUCATION DEPARTMENT

https://www.annacentenarylibrary.org/pages/view/109.%20%E0%AE%B5%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%A3%E0%AE%A9%E0%AF%8D_1920

செந்தமிழ்சிற்பிகள்

வல்லிக்கண்ணன் *(1920-2006)*



அறிமுகம்

வல்லிக்கண்ணன் (ரா.சு. கிருஷ்ணசாமி, நவம்பர் 12, 1920 - நவம்பர் 9, 2006) என்பவர் ஒரு தமிழக எழுத்தாளர். இவரது தந்தை ரா.மு. சுப்பிரமணிய பிள்ளை, தாய் மகமாயி அம்மாள். 1930களிலும், 40களின் துவக்க ஆண்டுகளிலில் லோகசக்தி, பாரதசக்தி போன்ற பத்திரிகைகளில் வல்லிக்கண்ணன் கதைகளும், உணர்ச்சிகரமான கட்டுரைகளும் பாடல்கள் என ரா. சு. கிருஷ்ணஸ்வாமி என்றும், ராசுகி என்ற பெயர்களில் எழுதத்துவங்கினார். அந்தச் சமயத்தில் தனக்கு ஒரு புனைபெயர் தேவை என எண்ணினார். இதையடுத்து அவரது சொந்த

ஊரான ராஜவல்லிபுரத்தில் உள்ள வல்லியையும் கிருஷ்ணஸ்வாமி என்ற தன்பெயரை கண்ணன் என மாற்றி இரண்டையும் இணைத்து, வல்லிக்கண்ணன் என்ற பெயரில் எழுதத்தொடங்கியவர். எழுத்தாளராக வேண்டும் என்பதற்காகவே அரசுப் பணியிலிருந்து விலகியவர். அரசுப் பணியிலிருந்து விலகிய பின்னர் தொடக்கத்தில் இதழ்களில் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். பின்னர் சிறுகதை, நாவல், குறுநாவல், கட்டுரை என ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். இவருடைய சிறுகதைகளில் சில ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. இவருடைய பெரிய மனுஷி எனும் சிறுகதை அனைத்து இந்திய மொழிகளிலும் நேரு பால புத்தக வரிசையிலும் வெளிவந்துள்ளது. இவர் எழுதிய "வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள்" எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2002 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் சிறுகதை எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

குறிப்பிடத்தக்க விருது(கள்) சாகித்திய அகாதமி விருது (1978)

(😊)(😊) ᘓᘓᘓᘓᘓᘓᘓᘓᘓᘓᘓᘓᘓ (😊)(😊)

வல்லிக்கண்ணன் (இயற்பெயர்: ரா.சு. கிருஷ்ணசாமி) 20-ஆம் நூற்றாண்டின் சிறந்த தமிழ் எழுத்தாளர், இதழாளர் மற்றும் விமர்சகர் ஆவார். புதுக்கவிதையின் முன்னோடியாகவும், பல இலக்கிய ஆக்கங்களை உருவாக்கியவராகவும் அறியப்படுகிறார்.

🌟 **சுருக்கமான விவரங்கள்**

- **பிறப்பு:** நவம்பர் 12, 1920 (திருநெல்வேலி மாவட்டம், ராஜவல்லிபுரம்)
- **இறப்பு:** நவம்பர் 9, 2006
- **புனைபெயர்கள்:** வல்லிக்கண்ணன், சு.கிருஷ்ணசாமி, நாரதர், கமலக்கண்ணன், தொடுவானம்

📖 **இலக்கியப் பங்களிப்புகள்**

- **இதழியல் பணி:** கிராம ஊழியன், தினமணி, சுதேசமித்திரன், மற்றும் தாமரை போன்ற பல முன்னணி இதழ்களில் ஆசிரியராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார்.
- **பிரபல படைப்புகள்:** *பெரிய மனுஷி* (சிறுகதை - அனைத்து இந்திய மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டது), *புதுக்கவிதையின்*

தோற்றமும் வளர்ச்சியும் (இலக்கிய திறனாய்வு), *வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள்.*

- **விருதுகள்:** இவர் எழுதிய நூல்கள் தமிழ்நாடு அரசின் சிறந்த நூல்களுக்கான பரிசுகளை வென்றுள்ளன. இவரது படைப்புகள் தமிழ்நாடு அரசால் நாட்டுடைமையாக்கப்பட்டுள்ளன.

இவரது எழுத்துலகப் பங்களிப்புகள் மற்றும் முழுமையான நூல்களின் பட்டியலை *தமிழ் இணையக் கல்விக்கழகம்* இணையதளத்தில் நீங்கள் காணலாம். இவரது வாழ்க்கை வரலாறு மற்றும் சிறுகதைகளை தமிழ் விக்கி பக்கத்தில் விரிவாகப் படிக்கலாம்.

திரு.வல்லிக்கண்ணன்

அவர்களது நாட்டுடைமையாக்கப்பட்ட நூல்கள்

https://www.tamilvu.org/library/nationalized/html/naauthor-81.htm


01.	அடியுங்கள் சாவுமணி
02.	அத்தை மகள்
03.	அமர வேதனை
04.	அருமையான துணை
05.	அவள் ஒரு எக்ஸ்ட்ரா
06.	அறிவின் கேள்வி
07.	அன்னக்கிளி
08.	ஆண் சிங்கம்
09.	ஆர்மேனியன் சிறுகதைகள் (மொழிபெயர்ப்பு)
10.	ஆற்றல் மிகுந்த அருங்கவிஞர்
11.	இருட்டு ராஜா
12.	இருளடைந்த பங்களா
13.	ஈட்டிமுனை
14.	ஊர்வலம் போன பெரியமனுஷி

15.	எப்படி உருப்படும்?
16.	எழுத்தாளர்கள் பத்திரிகைகள் அன்றும் இன்றும்
17.	எழுத்து சி.சு.செல்லப்பா
18.	எழுத்துலக நட்சத்திரம்
19.	ஒய்யாரி
20.	ஒரு வீட்டின் கதை
21.	ஓடிப்போனவள் கதை
22.	கடலில் நடந்தது (கார்க்கி கட்டுரைகள்) (மொழிபெயர்ப்பு)
23.	கல்யாணத்துக்குப்பிறகு காதல் புரியலாமா?
24.	கல்யாணம் இன்பம் கொடுப்பதா? இன்பத்தைக் கெடுப்பதா?
25.	கல்யாணி முதலிய கதைகள்
26.	கார்க்கி கட்டுரைகள் (மொழிபெயர்ப்பு)
27.	காலத்தின் குரல்
28.	குங்சாலாடு
29.	குமாரி செல்வா
30.	கேட்பாரில்லை
31.	கொடு கல்தா
32.	கோயில்களை மூடுங்கள்
33.	சகுந்தலா
34.	சரஸ்வதி காலம்
35.	சிறந்த பதின்மூன்று சிறுகதைகள் (மொழிபெயர்ப்பு)
36.	சின்னஞ்சிறு பெண்
37.	சினிமாவில் கடவுள்கள்
38.	சுதந்திரப் பறவைகள்
39.	செவ்வானம்

40.	டால்ஸ்டாய் கதைகள் (மொழிபெயர்ப்பு)
41.	தமிழ் வளர்த்த ஞானியார் அடிகள்
42.	தமிழில் சிறு பத்திரிகைகள்
43.	தாத்தாவும் பேரனும்(மொழிபெயர்ப்பு)
44.	தீபம் யுகம்
45.	துணிந்தவன்
46.	தோழி நல்ல தோழிதான்
47.	நம் நேரு
48.	நல்ல மனைவியை அடைவது எப்படி?
49.	நாசகாரக்கும்பல்
50.	நாட்டியக்காரி
51.	நிலைபெற்ற நினைவுகள் முதல் பாகம்
52.	நிலைபெற்ற நினைவுகள் இரண்டாம் பாகம்
53.	நினைவுச்சரம்
54.	நெருப்பு மனிதன் நெல்சன் மண்டேலா (மொழிபெயர்ப்பு)
55.	பாரதிக்குப்பின் தமிழ் உரைநடை
56.	பாரதிதாசன் உவமைநயம் (கட்டுரை)
57.	புண்ணியம் ஆம் பாவம் போம் (சிறுகதைகள்)
58.	புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்
59.	புதுமைப்பித்தன் (இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை)
60.	மக்கள் கலாச்சாரத்தை மண்ணாக்கும் சக்திகள்
61.	மத்தாப்பு சுந்தரி
62.	மலையருவி கவிதைகள்
63.	மன்னிக்கத் தெரியாதவர்
64.	மனிதர்கள்

65.	முத்தம்
66.	முத்துக்குளிப்பு
67.	ராகுல் சாங்கிருத்யாயன் (மொழிபெயர்ப்பு)
68.	ராதை சிரித்தாள்
69.	வசந்தம் மலர்ந்தது
70.	வல்லிக்கண்ணன் கட்டுரைகள்
71.	வல்லிக்கண்ணன் கடிதங்கள்
72.	வல்லிக்கண்ணன் கதைகள்-1
73.	வல்லிக்கண்ணன் கதைகள்-2
74.	வல்லிக்கண்ணன் கதைகள்-3
75.	வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள்
76.	வல்லிக்கண்ணனின் போராட்டங்கள்
77.	வல்லிக்கண்ணனின் மணியான கதைகள்
78.	வாசகர்கள் விமர்சகர்கள்
79.	வாழ விரும்பியவன்
80.	வாழ்க்கைச் சுவடுகள்
81.	வாழ்க்கைச் சுவடுகள்
82.	விடியுமா
83.	விடிவெள்ளி
84.	விவாகரத்து தேவைதானா?
85.	விஜயலஷ்மி பண்டிட் (வரலாறு)
86.	வீடும் வெளியும்

இதழியல்



வல்லிக்கண்ணன்

திரு.வி.கல்யாண சுந்தரனார் நடத்தி வந்த 'நவசக்தி' என்ற வார இதழின் உதவி ஆசிரியராகவும் ம.கி.திருவேங்கடம் நடத்தி வந்த லோகசக்தி, பாரத சக்தி என்ற இதழ்களின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றிக் கொண்டிருந்த சக்திதாசன் சுப்பிரமணியன் என்ற பத்திரிக்கையாளர் இதழ்களுக்குச்சந்தா சேர்க்க சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தபோது பரமக்குடிக்கு வந்து வல்லிக்கண்ணனுடன் தங்கினார். அவர் வல்லிக்கண்ணனின் மனதில் பத்திரிக்கையாளன் ஆகவேண்டும் என்னும் ஆசையை உருவாக்கினார். 1941-ல் பரமகுடியில் இருந்து மாற்றலாகி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்ற ஊருக்கு வந்தார். அரசுப் பணியில் இருந்து கொண்டு கதைகளை எழுதி பத்திரிக்கைகளுக்கு அனுப்புவதை கண்டித்து அவருடைய மேலதிகாரி ஆணையிடவே அரசுப் பணியை ராஜினாமா செய்தார். ராஜவல்லி புரத்தில் இருந்துகொண்டு 'இதய ஒலி' என்ற கையெழுத்துப் பத்திரிகையைத் தயாரித்தார். 1941-ல் திருநெல்வேலியில் 'நெல்லை வாலிபர்கள் சங்கம்' என்ற அமைப்பை ஆரம்பித்தார். அதில் தன் வாழ்நாள் நண்பரான தி.க.சிவசங்கரன்-ஐ சந்தித்தார். மே 24, 1942 அன்று வல்லிக்கண்ணன் இதழ்களில் பணியாற்றும் ஆர்வத்துடன் திருநெல்வேலியில் இருந்து சென்னைக்கு நடந்தே பயணமானார். வேலை கிடைக்காமல் திரும்பவும் திருநெல்வேலிக்கு வந்தார். புதுக்கோட்டையில் இருந்து வெளிவந்த 'திருமகள்' என்ற பத்திரிகையின் ஆசிரியரான ரா.சி.சிதம்பரம் அழைப்பை ஏற்று 1943 ஜனவரி மாதக் கடைசியில் புதுக்கோட்டை சென்று இதழில் சேர்ந்தார். திருமகள் சில மாதங்களில் நின்றுவிட்டது. வல்லிக்கண்ணன் கோவையில் பி.எஸ்.செட்டியார் நடத்திய

சினிமா உலகம் இதழில் பணியாற்றினார். 1943 டிசம்பரில் சென்னை சென்று நவசக்தியில் சேர்ந்தார்.

அ.வெ.ர.கி. செட்டியார் அழைப்பின் பேரில் துறையூரில் இருந்து வெளிவரும் கிராம ஊழியன் பத்திரிக்கையில் 1944 பிப்ரவரி இறுதியில் வேலைக்குச் சேர்ந்தார். கிராம ஊழியன் இலக்கிய இதழாக வெளிவந்தது. அதன் ஆசிரியர் திருலோகசீதாராம், ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், தி. ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு, எம்.வி.வெங்கட்ராம், கி.ரா.கோபாலன் ஆகியோர் அதில் எழுதினார்கள். கிராம ஊழியன் பத்திரிக்கையின் ஆசிரியர் பொறுப்பில் இருந்த திருலோகசீதாராம் அதிலிருந்து விலகி திருச்சியில் இருந்து புதிதாக வெளிவந்த 'சிவாஜி' என்ற இதழில் சேர்ந்தபோது கிராம ஊழியன் இதழின் ஆசிரியர் பொறுப்பை வல்லிக்கண்ணன் ஏற்றுக் கொண்டார். இரண்டு ஆண்டுகளுக்குப்பின் ஹனுமான் வார இதழில் துணை ஆசிரியராகப் பணிபுரிந்தார். எழுத்து இதழுடனும் பின்னர் நா.பார்த்தசாரதியின் தீபம் இதழுடனும் இணைந்து பணியாற்றினார். 1952-க்குப்பின் வல்லிக்கண்ணன் எந்த இதழிலும் முழுநேர ஊழியராகப் பணியாற்றவில்லை.

அச்சு இதழ்களின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகும் 'இதய ஒலி' என்ற கையெழுத்துப் பத்திரிக்கையையும் வல்லிக்கண்ணன் தொடர்ந்து நடத்திக் கொண!டிருந்தார். 1946-ல் ஸ்ரீரங்கத்தில் கையெழுத்துப் பத்திரிக்கையின் மாநாடு நடைபெற்றபோது அம்மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக வல்லிக்கண்ணன் செயல்பட்டார். இதய ஒலி உட்பட 50-க்கும் மேற்பட்ட சிற்றிதழ்கள் கணகாட்சியில் வைக்கப்பட்டன.

நூல்கள்

கவிதை

- அமர வேதனை - 1974

சிறுகதை

- கல்யாணி முதலிய கதைகள் - 1944
- நாட்டியக்காரி - 1946
- ஓடிப் போனவள் கதை (சொக்கலிங்கம்) - 1946
- மத்தாப்பு சுந்தரி - 1948
- வல்லிக்கண்ணன் கதைகள் - 1954
- ஆண்சிங்கம் - 1964
- வாழ விரும்பியவன் - 1975
- அருமையான துணை - 1991
- வல்லிக்கண்ணன் கதைகள் (வேறு தொகுப்பு) - 1991
- மனிதர்கள் - 1991
- சுதந்திரப் பறவைகள் - 1994
- பெரிய மனுஷி (பால புத்தக வரிசை) (பல மொழிகளில்) - 1996
- வல்லிக்கண்ணன் கதைகள் (வேறு + 1 கதைகள்) - 2000
- தோழி நல்ல தோழி தான் - 2000
- வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள் - 2002
- புண்ணியம் ஆம் பாவம் போம் சிறுகதைகள் - 2002
- வல்லிக்கண்ணனின் மணியான கதைகள் - 2003

நாவல்

- குஞ்சாலாடு (நையாண்டி பாரதி) - 1946
- ராதை சிரித்தாள் - 1948
- ஒய்யாரி - 1947
- அவள் ஒரு எக்ஸ்ட்ரா - 1949
- அத்தை மகள் - 1950
- முத்தம் - 1951
- செவ்வானம் (கோரநாதன்) - 1951
- குமாரி செல்வா - 1951
- சகுந்தலா - 1957
- விடிவெள்ளி - 1962
- அன்னக்கிளி - 1962
- வசந்தம் மலர்ந்தது - 1965
- வீடும் வெளியும் - 1967
- ஒரு வீட்டின் கதை - 1979

- நினைவுச்சரம் - 1980
- அலைமோதும்கடலோரத்தில் - 1980
- இருட்டு ராஜா - 1985
- மன்னிக்கத் தெரியாதவர் - 1991
- துணிந்தவன் - 2000

நாடகம்

- நாசகாரக் கும்பல் (நையாண்டி பாரதி) - 1948
- விடியுமா - 1948

கட்டுரைகள்

- உவமைநயம் - 1945
- கோயில் களை மூடுங்கள் (கோரநாதன்) - 1946
- ஈட்டிமுனை (கோரநாதன்) - 1946
- அடியுங்கள் சாவுமணி (மிவாஸ்கி) - 1947
- சினிமாவில் கடவுள்கள் (கோரநாதன்) - 1947
- கொடு கல்தா (கோரநாதன்) - 1948
- எப்படி உருப்படும்? (கோரநாதன்) - 1948
- கேட்பாரில்லை (கோரநாதன்) - 1949
- அறிவின் கேள்வி (கோரநாதன்) - 1949
- விவாகரத்து தேவைதானா? - 1950
- நல்ல மனைவியை அடைவது எப்படி? - 1950
- கல்யாணத்துக்குப் பிறகு காதல் புரியலாமா? - 1950
- கல்யாணம் இன்பம் கொடுப்பதா? துன்பத்தைக் கெடுப்பதா? - 1950
- முத்துக்குளிப்பு - 1965
- வல்லிக்கண்ணன் கட்டுரைகள் - மித்ர - 2004
- வாசகர்கள் விமர்சகர்கள் - 1987
- மக்கள் கலாச்சாரத்தை மண்ணாக்கும் சக்திகள் - 1987

இலக்கிய வரலாறு

- பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை - 1981
- சரஸ்வதி காலம் - 1986
- எழுத்தாளர்கள் பத்திரிகைகள் அன்றும் இன்றும் - 1986

- தமிழில் சிறு பத்திரிகைகள் - 1991
- தீபம் யுகம் - 1999
- புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் - 1977

வாழ்க்கை வரலாறு

- புதுமைப்பித்தன் (இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசை) - 1987
- ஆற்றல் மிகுந்த அருங்கவிஞர் - 1995
- எழுத்து சி.சு. செல்லப்பா - 2002
- எழுத்துலக நட்சத்திரம் (தீபம்) நா. பார்த்த சாரதி - 2005
- தமிழ் வளர்த்த ஞானியார் அடிகள் - 2003
- நம் நேரு - 1954
- விஜயலஷ்மி (வரலாறு) - 1954

தன் வரலாறு

- வல்லிக்கண்ணனின் போராட்டங்கள் - 1988
- காலத்தின் குரல் (60 கேள்விகளுக்கு பதில்) - 1980
- வல்லிக்கண்ணன் கடிதங்கள் - 1999
- வாழ்க்கைச் சுவடுகள் (தன் வரலாறு) - 2001
- நிலைபெற்ற நினைவுகள் - 2005

மொழி பெயர்ப்பு

- டால்ஸ்டாய் - 1956
- கடலில் நடந்தது (கார்க்கி கட்டுரைகள்) - 1956
- சின்னஞ்சிறுபெண் (கார்க்கி கட்டுரைகள்) - 1957
- கார்க்கி கட்டுரைகள் - 1957
- தாத்தாவும் பேரனும் - 1959
- ராகுல் சாங்கிருத்யாயன் - 1986
- ஆர் மேனியன் சிறுகதைகள் - 1991
- சிறந்த பதின்மூன்று சிறுகதைகள் - 1995
- நெருப்பு மனிதன் நெல்சன் மண்டேலா – 2005



<u>**முன்னுரை**</u>

மண்ணில் வாழ்கின்ற மக்களில் சிலர் மட்டும் வரலாறாக வாழ்ந்து காட்டுகிறார்கள். சிலர் வரலாற்றில் இடம் பிடிக்கிறார்கள். அப்படிப்பட்ட மனிதர்களில் ஒருவர்தான் வல்லிக்கண்ணன்.

தமிழ் இலக்கிய உலகில் தனக்கென்று ஒரு தனி தடம் பதித்தவர் வல்லிக்கண்ணன். வாழ்கின்ற காலமெல்லாம் நேரடியாகவும், மறைமுகமாகவும் தமிழ் இலக்கியம் பற்றியே பேசியும் எழுதியும் vaaவாழ்ந்தவர். சுமார் 17 வயதில் பிடித்த பேனாவை தன் உயிர் பிரியும் வரை அவர் கீழே வைக்கவே இல்லை. அவர் வாழ்ந்த நாட்களில் எழுதாத நாளெல்லாம் "எதையோ இழந்த நாள்" என்று வாழ்ந்தார்.

பேச்சாலும், எழுத்தாலும், செயல்பாடுகளாலும் தமிழ் இலக்கியதிற்கு நாளும் தொண்டு செய்த நற்றமிழ் அறிஞர் அவர். ilஇலக்கியத்தின் எல்லா வகைமைகளிலும் சுவடு பதித்தவர். கவிதை, சிறுகதை, நாவல், திறனாய்வு, வரலாறு, நாடகம் என்று அனைத்து வகைமைகளிலும் எழுதிக் குவித்தவர் வல்லிக்கண்ணன்.

தன் வாழ்வையே ஒரு இலக்கிய வேள்வியாக

ஏற்றுக்கொண்டார். படிப்பதிலும் எழுதுவதிலும் அளவில்லாத ஆர்வம் கொண்டு அதற்காகவே தன் இல்வாழ்வையே தத்தம் செய்து கொண்ட தியாக தீபம் அவர்.

பணத்திற்கும் பதவிக்கும் ஏன் புகழுக்கும் கூட மயங்காதவர்; விலை போகாதவர். தன் வீடு, தன் பெண்டு, தன் பிள்ளை என்று கூட வாழாதவர். தனக்கென்று வாழ்வில் எந்த சொத்து சுகத்தையும் சேர்த்து வைக்காமல் வாழ்ந்து மறைந்த தியாகி வல்லிக்கண்ணன்.

மரபான தமிழ் இலக்கியத்திலும் நவீன இலக்கியத்திலும் ஒரு சேர புலமை பெற்றவர். "இப்படி தமிழ் இலக்கியத்திற்காகவே ஒரு மனிதன் வாழ முடியுமா?" என்று வாழ்ந்து காட்டியவர்.

இளைஞர்களின் படைப்புக்களைத் தேடிப்படிப்பிடித்துப் படித்து அவர்களுக்கு உடனுக்குடன் கடிதங்கள் எழுதி உற்சாகப் படுத்தியவர். தான் வாழ்கின்ற காலத்தில் மூன்று தலைமுறை எழுத்தாளர்களுடன் தொடர்பும், நட்பும் வைத்திருந்த சாதனையாளர்.

மிக, மிக எளிமையாக வாழ்ந்து காட்டியவர். ஆடம்பரம் என்ற சொல்லையே தன் வாழ்நாளில் அறிந்திராதவர். உருவத்தால் மிகவும் மெலிந்தவர். ஆனால் நெஞ்சுறுதியில் மிகவும் உயர்ந்தவர். தாழ்ந்த குரலில் பேசினாலும் வாழ்வில் யார்க்கும் தலை வணங்காதவர்.

இலக்கியப் பணி ஒன்றையே தன் வாழ்வுப் பணியாக கொண்டு வாழ்ந்து காட்டியவர். தன் படைப்புகளை சந்தையில் விலை பேசி விற்க விரும்பாதவர். ஆனால் ஒரு தேனீயைப் போல சுழன்று சுழன்று சுறுசுறுப்பாக தமிழ் இலக்கியத்திற்காக உழைத்தவர்.

நண்பர்களை மதிப்பதிலும், இளைஞர்களை உற்சாகப்படுத்துவதிலும் இவருக்கு இணை இவரே! காலங்காலமாய் ஊற்றெடுத்துப் பொங்கிப் பிரவாகமாக வரும் அனைத்து தளத்தின் சிற்றிதழ்களையும் அலுக்காமல் சலிக்காமல் படித்து அப்பத்திரிகைகளைப் பற்றிய தனது அபிப்ராயங்களை உடனுக்குடன் பதிவு செய்த பண்பாளர்.

அனேக எழுத்தாளர்களுக்கு வல்லிக்கண்ணன் தன் வாயால் பெயர் சூட்டி மகிழ்ந்துள்ளார். வண்ணநிலவனுக்கும் வண்ணதாசனுக்கும் பெயர் சூட்டியவர் இவரே.பல எழுத்தாளர்களுக்கு எப்படி இலக்கியம் படைக்க வேண்டும் என்று அருகில் இருந்து சொல்லிக் கொடுத்தவர். ஒரு தாயின் ஸ்தானத்தில் இருந்து தன் இலக்கியப் பிள்ளைகளுக்கு தமிழ் சுவையை ஊட்டியவர். ஒரு தந்தையின்

இடத்தில் இருந்து தன் இலக்கியக் குழந்தைகளை தட்டிக் கொடுத்து வளர்த்தெடுத்தவர். ஒரு அண்ணனைப் போல பாசத்தோடும் தன் இலக்கியத் தம்பிகளின் விரல் பிடித்து நடை பழக்கியவர். இப்படி எண்ணற்ற புகழுக்குச் சொந்தக்காரரான வல்லிக்கண்ணன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதும் வாய்ப்புக் கிடைத்ததை நான் ஒரு பேராகக் கருதுகிறேன். இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த சாகித்திய அகதெமி நிறுவனத்திற்கு நன்றி கூறுகிறேன். எப்போதும் என்னை உற்சாகப் படுத்திக் கொண்டிருக்கும் திறனாய்வுத் தென்றல் ஐயா தி.க.சி அவர்களுக்கும் என் நன்றிகளைக் காணிக்கையாக்குகிறேன்.

பிறப்பும் இளமையும்:

வல்லிக்கண்ணன் திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டம் திசையன்விளை என்ற கிராமத்தில் 12-11-1920 அன்று பிறந்தார். இவரது தந்தையார் ரா.மு. சுப்ரமணிய பிள்ளை. தாயார் மகமாயி அம்மாள். நடுத்தரமான சைவ வேளாளர் மரபைச் சார்ந்தவர். இவர் பிறந்த உடன் இவருக்குப் பெற்றோர்கள் கோபாலகிருஷ்ணன் என்று தான் பெயர் சூடினார்கள். ஆனால் பள்ளியில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கும் போது இவர் பெயரை கிருஷ்ணசுவாமி என்று இவர் தந்தை பதிவு செய்து விடுகிறார். வல்லிக்கண்ணன் என்பது இவரின் புனைப்பெயரே! இவரது தந்தையார் உப்பளங்களை ஆய்வு செய்யும் ஆய்வாளராகப் பணியாற்றினார். வல்லிக்கண்ணனின் பத்தாவது வயதில் அவர் தந்தை இறந்து விட்டதால் தாயாரின் அரவணைப்பில் வளர்ந்தார்.

வல்லிக்கண்ணன் பிறந்த ஊர் திசையின்விளைதான் என்றாலும் அவரது பூர்வீகம் திருநெல்வேலிக்கு அருகில் உள்ள ராஜவல்லிபுரம் ஆகும். முதன் முதலில் சாகித்திய அகாதெமி விருது பெற்ற பேச்சாற்றல் மிக்க பேரறிஞரும், தமிழ் எழுத்தாளரும், பேராசிரியருமான ரா.பி. சேதுப்பிள்ளை பிறந்த ஊரும் இதே ராஜவில்லிபுரம்தான்.

இவருக்கு உடன் பிறந்தவர்கள் இரண்டு அண்ணன்களும் ஒரு

தம்பியும். இவர், இவரின் தாய்க்கு மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தார். தந்தையார் உப்பளங்களை ஆய்வு செய்யும் ஆய்வாளராக அரசு பணியில் இருந்thaததால், ஊர், ஊராக மாறுதலாகிச் செல்லும் நிலையில் இருந்தார். ஒரு வயது வரை திசையின்விளையில் வாழ்ந்தவர். இரண்டாவது வயதில் தூத்துக்குடியிலும் மூன்றாவது வயதில் ஒட்டப்பிடாரத்திலும் நான்காவது வயதில் கோவில்பட்டியிலும் வசிக்க நேர்ந்தது. ஐந்தாவது வயதில் கோவில்பட்டியில் உள்ள ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் இவரின் கல்விப் பயிற்சி தொடங்குகிறது. சில மாதங்கள் மட்டுமே, அங்குள்ள அண்ணாவியிடம் எழுத்துப் பயிற்சி பெற்றுக் கொள்கிறார். பிறகு அருகில் இருந்த ஒரு துவக்கப் பள்ளியில் ஒன்றாம் வகுப்பில் சேர்க்கப் படுகிறார். 1926 முதல் ஸ்ரீவைகுண்டம் அருகில் உள்ள பெருங்குளம் என்ற ஊரில் இரண்டு, மூன்றாம் வகுப்பு கல்வியைக் கற்கிறார். இந்தப் பெருங்குளம் தான் எழுத்தாளர் அ. மாதவய்யா பிறந்த ஊராகும். நான்காம் வகுப்பை திருநெல்வேலி மந்திரமூர்த்தி உயர் நிலைப் பள்ளியில் முடிக்கிறார். ஐந்தாம் வகுப்பு முதல் பள்ளி இறுதித் தேர்வு (S.S.L.C.) முடிய பாளையங்கோட்டை தூய சவேரியர் உயர் நிலைப் பள்ளியில் பயில்கிறார். 1936-ல் பள்ளிப் படிப்பை முடித்த பிறகு சொந்த ஊரான ராஜவல்லிபுரத்திற்கு திரும்புகிறார். அங்கு தன் தாயாருடன் சுமார் இருபது மாதங்கள் தங்குகிறார்.

சிறுபத்திரிக்கைகளுடனான அறிமுகம் இவருக்குச் சிறு வயது முதலே கிடைத்து விடுகிறது. நான்காம் வகுப்பு படிக்கும் போதே பரலி.சு.நெல்லையப்பரின் ‘லோபகாரி’ என்ற சிற்றிதழும் ‘ஒற்றுமை’ என்ற மாதப் பத்திரிகையும் அண்டை வீட்டுக்காரர்களால் இவருக்குப் படிக்கக் கிடைக்கிறது.

‘தமிழ்நாடு’ நாளிதழுக்கு அவரின் தந்தையார் சந்தா கட்டியிருந்ததால் அப்பத்திரிக்கை அவர் வீட்டிற்கே தபாலில் வந்து விடுகிறது. எனவே தமிழ்நாடு என்ற தினசரியையும் இவர் சிறுவயது முதலே படிக்க ஆரம்பிக்கின்றார். சேலம் வரதராஜநாயுடு சென்னையிலிருந்து நடத்திய பத்திரிக்கையாகும் அது.

சங்கு சுப்பிரமணியம் என்பவர் நடத்திய 'சுதந்திர சங்கு' என்ற பத்திரிகையை வ.க.வின் மூத்த சகோதரர் வாடிக்கையாக வாங்குவதால் அவ்விதழும் அவருக்கு வாசிக்கக் கிடைத்தது. டி.எஸ்.சொக்கலிங்கம் என்பவர் நடத்திய காந்தி இதழும், ஜெயபாரதி, மணிக்கொடி முதலிய சிற்றிதழ்களும் அன்றைய காலக்கட்டத்தில் 'காலணா, அரையணா' (இருபதுகளில் புழக்கத்தில் இருந்த நாணயங்கள்) விலைக்கு கிடைத்தன. இத்தகைய சிற்றிதழ்களும் அவரின் சகோதரர்கள் மூலமும் பக்கத்து வீட்டுக்காரரர்களின் மூலமும் அவருக்கு எளிதாகப் படிக்கக் கிடைத்ததால் சிறு வயது முதலே 'வ.க.'வுக்கு சிற்றிதழ்களின் வாசிப்பு வசப்பட்டு விடுகிறது. சிறுவயது முதலே துணிக்கடை மறியல், அன்னிய துணி எரிப்பு போன்ற சத்தியாகிரகப் போரட்டங்களை நேரில் காணும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்தது. திருநெல்வேலியில் சத்தியமூர்த்தி, சோமயாஜுலு, திரிகூட சுந்தரம் பிள்ளை போன்ற சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் பேசும் பேச்சுக்களைக் கேட்க்கும் சந்தர்ப்பமும் சிறு வயதிலேயே அவருக்குக் கிடைத்தது.

சுதந்திர போராட்ட காலத்தில் நடத்தப்பட்ட பொதுக் கூட்டங்களில் முதலில் மகாகவி பாரதியாரின் சுதந்திரப் பாடல்களைப் பாடுவார்கள். அதே போல சுதந்திரப் போராட்ட ஊர்வலங்களிலும் பாரதியாரின் பாடல்களை உணர்ச்சி பூர்வமாகப் பாடிக்கொண்டு செல்வார்கள். அப்பாடல்களை சிறு வயது முதலே கேட்டதால் பாரதியாரின் பாடல்கள் மீது இவருக்கு ஒரு பற்றுதல் உண்டாகிறது. எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் என்பவர் எழுதி வெளியிட்ட சுதந்திரப் போராட்ட தியாகிகளின் வரலாறு, தேசத் தலைவர்களின் சரித்திரம் போன்றவை மிகக் குறைந்த விலையில் மலிவுப் பதிப்பாக, மாணவர்களுக்கும் கிடத்தன. அவற்றையும் ஓரணா, அரையணா கொடுத்து இவர் வாங்கிப் படிக்கலானார். மாணவப் பருவத்திலேயே இவர் வாழ்ந்த சூழல் இவரை சிற்றிதழ்களின் காதலனாக்குகிறது. இந்த அனுபவங்களின் அடிப்படையில் தான் இவர் பிற்காலத்தில் 'வீடும் வெளியும்' என்ற நாவலை எழுதுகிறார். இவரின் பக்கத்து வீட்டுக்காரரான ரங்கூன் பிள்ளை என்பவர் ஆனந்த விகடன் இதழ்களை ஆரம்பம் முதல் வருட வாரியாகப் 'பைண்ட்' செய்து வைத்திருக்கிறார். அவைகள் எல்லாம் எட்டாம் வகுப்பு

படிக்கும் போதே இவருக்கு மிகச் சுலபமாகப் படிக்கக் கிடைக்கிறது. அத்தோடு புதிய ஆனந்த விகடன் இதழ்களும் உடனுக்குடன் இவருக்குப் படிக்கக் கிடைக்கிறது. இதுதவிர வடுவூர் துரைசாமி ஐயங்கார், ஆரணி குப்புசாமி முதலியார், வை.மு.கோதைநாயகி அம்மாள், ஜே.ஆர்.ரங்கராஜு ஆகியோரின் நாவல்களும் ரங்கூன் பிள்ளையின் உதவியால் இவருக்கு வாசிக்கக் கிடைக்கிறது.

இவரின் சகோதரர் கல்யாணசுந்தரம் பாளையங்கோட்டை முனிசிபல் நூலகத்தில் இருந்து சில நாவல்களை எடுத்து வந்து ஞாயிற்றுக் கிழமைகளிலும் ராச்சாப்பட்டிற்குப் பிறகும் உரக்கப் படிக்க அதை அவரின் நண்பர் குழாம் சுற்றி அமர்ந்து கேட்டு ரசிக்கும். அந்த நண்பர்கள் குழாத்தில் இவரும் போய் அமர்ந்து நாவல் வாசிப்பைக் கேட்டு ரசிப்பார்.

அந்தக் காலத்தில் கல்தூண் மீது சதுரவடிவ கண்ணாடிக் கூண்டுக்குள், முனிசிபாலிட்டி ஆள் ஒருவன் வந்து கருக்கல் நேரத்தில் ஒரு மண்ணெண்ணை விளக்கைப் பொருத்தி வைத்து விட்டுச் செல்வான். ஊர் ஒடுங்கிய பிறகு, 'நாவல் வாசிப்பு நண்பர்கள்' அவ்விளக்கை எடுத்து வந்து அதன் வெளிச்சத்தில் நாவல் வாசிப்பை நடத்துவதும் உண்டு. அரசாங்க விளக்கின் வெளிச்சத்தின் நாவல் வாசிப்பில், ஜே.ஆர்.ரங்கராஜூ எழுதிய 'ராஜம்மாள்' தனசிங் என்பவர் எழுதிய கருங்குயில் குன்றத்துக் கொலை, ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி மற்றும் எஸ்.எஸ்.அருணகிரிநாதர் எழுதிய 'மோகன சுந்தரம்' என்ற நாவலும் இடம் பெறுவதுண்டு. சில நேரம் 'பிரசண்ட விகடன்' என்ற மாதம் இரு இதழையும் அங்கு வாசிப்பார்கள்.

உயர் நிலைப் பள்ளியில் காலடி எடுத்து வைத்த பிறகு, இவரின் வாசிப்புத் தளம் விரிவடைகிறது. மை மேகசீன், மேரி மேகசின் போன்ற ஆங்கிலப் பத்திரிக்கைகளும், பள்ளி நூலகத்திலேயே இவருக்குப் படிக்கக் கிடைக்கிறது. படிக்கிற காலத்தில் ஐந்தாம் வகுப்பு முதலே 'நன் மாணக்கன்' என்பதற்கான பரிசுகளை இவருக்குக் கொடுத்தார்கள். அப்பரிசுகளும் புத்தகங்களாகவே இருந்தன.

அந்தக் காலத்தில் பெற்றோர்கள் ஆண் பிள்ளைகளுக்கும் பெண் குழந்தைகளைப் போல நீளமாக தலை முடி வளர்த்தார்கள். அதில் தலை வாரி பூச்சூட்டியும் மகிழ்ந்தார்கள். வல்லிக்கண்ணனும் எட்டாவது வகுப்பு படிக்கும் வரை நீளமான தலை முடியுடன் தான் பள்ளிக்கூடம் சென்று வந்தார். எட்டாம் வகுப்பில் சேர்ந்த பிறகுதான் அவர் தன் தலைமுடியை வெட்டி கிராப் வைத்துக் கொண்டார். அந்தக் காலத்தில் பொழுது போக்கிற்கு மக்கள், நாடகம் பார்க்கச் சென்றார்கள். சென்னையைச் சேர்ந்த கன்னையா கம்பெனி திருநெல்வேலிக்கு வந்து அடிக்கடி பகவத் கீதை போன்ற பக்தி நாடகங்களை நடத்தியது. கேரளாவில் இருந்து 'ஒயிட்வே' என்ற சர்கஸ் கம்பெனிக்காரர்களும் அடிக்கடி பாளையங்கோட்டை வந்து 'டேரா' போட்டு சர்கஸ் காட்சிகளை நடத்தினார்கள். 1932-ல் பாளை மேட்டுத் திடல் மைதானத்திற்கு ஒரு ஆகாய விமானம் வந்து தரையிறங்கியது. அதன் உரிமையாளர் அதைக் காட்சிப் பொருளாக்கி அதை வெளியே நின்று பார்ப்பதற்கும் விமானத்தின் உள்ளே சென்று பார்ப்பதற்கும் என்று தனித் தனியே கட்டணங்களை வசூலித்தார். மாணவர்களும், பொதுமக்களும் திரளாகக் கூடி அவ்விமானத்தைக் கண்டு களித்தார்கள். இத்தகைய கேளிக்கைகளிலும் இவரின் மனம் ஈடுபட்டது. கிராமஃபோன் பெட்டிகள் புழக்கத்தில் இருந்த காலம் அது. அப்பெட்டிகளில் இருந்து வரும் பாட்டுகளிலும் 'வ.க.'வின் மனம் லயித்தது. பேசாப் படங்கள் என்ற வசனமில்லாத ஊமைப் படங்கள் திருநெல்வேலியில் உள்ள பேலஸ்டிவேல்ஸ் தியேட்டரில் திரையிடப் பட்டது. அத்தகைய ஊமைப்படங்களையும் பார்த்து ரசித்தார் வ.க.

நான்காவது வகுப்பு படிக்கும் போதே சிறு பத்திரிகைகளைப் படிக்கத் தொடங்கியதால் அதில் உள்ள கதைகளைப் போல நாமும் எழுத வேண்டும் என்று 'வ.க.' நினைத்து கதைகளை எழுத ஆரம்பித்தார். பள்ளி இறுதி வகுப்பு வரை படித்து விட்டு ராஜவல்லிபுரத்தில் தாயாரோடு இருந்த காலக்கட்டத்தில் சக்தி சங்கர் என்ற வாசகரிடமிருந்து மணிக்கொடி இதழ்களின் பையிண்டு வால்யூம்களை வாங்கிப் படிக்கலானார். அதில் பிரசுரமாகியிருந்த புதுமைப் பித்தன் கதைகள் "யாத்ரா மார்க்கம்" பகுதியில் வெளி வந்த இலக்கிய சர்ச்சைகள் நா.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன், பி.எஸ்.ராமையா, மௌனி முதலியவர்களின் கதைகள் இவரைப் பெரிதும் கவர்ந்தன. இத்தகைய கதைகளைப் போல தாமும் எழுத

வேண்டும் என்று நினைத்து 'வ.க.'வும் சிறுகதைகள் silaசிலவற்றை எழுதத் தொடங்கினார். அக்கதைகளை உடனே பத்திரிக்கைகளுக்கு எப்படி அனுப்ப வேண்டும் என்ற 'வழிமுறைகள்' எதுவும் அவருக்குத் தெரியவில்லை. என்றாலும் தான் எழுதிய கதைகளை ஒரு சில வாசகர்கள் முன்பாவது வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். எனவே 'இதய ஒலி' என்ற பெயரில் தானே ஒரு கையெழுத்துப் பத்திரிகையைத் தொடங்கினார். அதை மாத இதழாகவும் கொண்டு வந்தார். அந்தப் பத்திரிகையின் பக்கங்களை நிரப்புவதற்காக தானே கதைகள், கட்டுரைகள், கவிதைகள், துணுக்குகள் என்று அனைத்தையும் எழுதினார். இப்படித்தான் 'வ.க'வின் எழுத்துப் பணியும், பத்திரிக்கைப் பணியும் ஒருசேர இவரின் பதினாராவது வயதிலேயே துவங்குகிறது. அன்றிலிருந்து படிப்பதும் எழுதுவதுமே இவரின் வாழ்க்கையாகிறது.

அரசுப் பணியாற்றிய அனுபவம்:

பள்ளி இறுதித் தேர்வை முடித்து விட்டு ஒரு வருடம் ஒன்பது மாதம் வீட்டில் எழுதுவதும் படிப்பதுமாக இருந்தவர்க்கு இராமநாதபுரம் மாவட்டம், பரமகுடியில் விவசாய டிமான்ஸ்ட்ரேட்டர் ஆஃபீசில் ஸ்டோர்கீப்பர் என்ற அரசுப் பணியில் சேர்ந்தார். வீட்டை விட்டு, தாயையும் சகோதரர்களையும் பிரிந்து முதன் முதலாக தனியாக வாழத் தலைபட்டது இங்கே தான். அருகில் உள்ள ஓட்டலில் சாப்பிட்டுக் கொண்டு ஆபீசிலேயே தங்கிக் கொள்கிறார். மாலை நேரதில் அருகில் உள்ள டைப்ரைட்டிங் இன்ஸ்டிட்யூட்டில் சேர்ந்து டைப்ரைட்டிங்கும் கற்றுக் கொள்கிறார்.

ஓய்வான நேரத்தைப் படிப்பதிலும் எழுதுவதிலும் செலவு செய்கிறார். நவசக்தி, லோகசக்தி, பாரதசக்தி போன்ற இதழ்களில் 1939-ல் இவரின் எழுத்துக்கள் அச்சில் வெளிவருகின்றன. அப்போதுதான் வல்லிக்கண்ணன் என்ற புனைப்பெயரை தனக்குச் சூட்டிக்கொள்கிறார். அன்றிலிருந்து இவரின் படைப்புக்கள் 'வல்லிக்கண்ணன்' என்ற பெயரிலேயே பிரசுரமாகத் தொடங்கின.

பரமகுடியில் அரசுப்பணி புரிந்த காலக்கட்டத்தில் டைப்ரைட்டிங்கில்

'லோயர்' தேர்வு எழுதித் தேர்ச்சி பெறுகிறார். அத்தோடு இந்தி மொழியையும் கற்றுக் கொள்கிறார். இந்தி மொழிக் கதைகளைப் படித்துப் புரிந்து கொள்கிற, மொழிப்பெயர்க்கிற அளவுக்கு இந்தி மொழியிலும் பாண்டித்தியம் பெறுகிறார்.

சென்னையிலிருந்து சக்திதாசன் சுப்பிரமணியன் என்ற பத்திரிக்கையாளர் ஒருவர் பரமக்குடி வந்து வல்லிக்கண்ணனுடன் இரண்டு நாட்கள் தங்குகிறார். அவர் திரு.வி.கல்யாண சுந்தரனார் நடத்தி வந்த 'நவசக்தி' என்ற வார இதழின் உதவி ஆசிரியராகவும் ம.கி.திருவேங்கடம் என்பவர் நடத்தி வந்த லோக சக்தி, பாரத சக்தி என்ற இதழ்களின் ஆசிரியர் குழுவிலும் பணியாற்றிக் கொண்டிருந்தார். அப்பத்திரிக்கைகளின் வளர்ச்சிக்காகவும், சந்தா சேர்க்கவும், தமிழகம் எங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தவர், பரமக்குடிக்கும் வருகிறார். வல்லிக்கண்ணனின், எழுத்துக்களைப் படித்துப் பார்த்து விட்டு, அவரின் இலக்கிய ஆர்வத்தையும் தெரிந்து கொண்டு, "நீங்கள் இருக்க வேண்டிய இடம் அரசு அலுவலகம் அல்ல. சென்னையில் உள்ள ஏதாவது ஒரு பத்திரிக்கை அலுவலகமாகும். இப்போது 'வட்டத் துவாரத்தில் சதுரமுளை' போல பொருத்தமற்ற இடத்தில் உட்கார்ந்து பணி செய்து கொண்டிருக்கிறீர்கள்" என்று கூறி வல்லிக்கண்ணனின் மனதில் பத்திரிக்கையாளன் என்ற விதையை முதன் முதலில் ஊன்றி விடுகிறார். நாளாவட்டத்தில் அந்த விதை முளைத்து வளர்ந்து விருட்சமாகிவிடுகிறது.

1941-ல் பரமகுடியில் இருந்து மாற்றலாகி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்ற ஊருக்கு வருகிறார். ஸ்ரீவைகுண்டம் வந்த பிறகும் இவர் வழக்கம் போல் கதைகளையும் கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதி பத்திரிக்கைகளுக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார். அரசுப் பணியில் இருந்து கொண்டு கதைகளை எழுதி பத்திரிக்கைகளுக்கு அனுப்பக்கூடாது என்று அவரின் மேலதிகாரி வல்லிகண்ணனை எச்சரிக்கிறார். ஆனால் வல்லிக்கண்ணன் தொடர்ந்து பத்திரிக்கைகளுக்கு தன் படைப்புகளை எழுதி அனுப்புகிறார்.

வல்லிகண்ணனின் பிடிவாத குணத்தைக் கண்ட அவரின் மேலதிகாரி, 'இவர் சுதந்திர போரட்டத்தை ஆதரித்து கட்டுரைகள் எழுதுவதாக

மேலிடத்திற்கு புகார் செய்கிறார். மேலிடத்திலிருந்து இவருக்கு விளக்கம் கேட்டுக் கடிதம் வருகிறது. ஸ்ரீவைகுண்டத்தில் ஒரு வருடம் ஏழு மாதங்கள் அரசு பணி புரிந்த பிறகு, மேலதிகாரியின் தொல்லைகள் தாங்க முடியாதலால் அரசுப் பணியை ராஜினாமா செய்கிறார்.

அவர் அரசுப் பணியைத் துறந்தது அவரின் தாயார் உட்பட அவரின் உறவினர்கள் அனைவருக்கும் பிடிக்கவில்லை. என்றாலும் அவரின் சிறிய சகோதரர் கோமதி நாயகம் மட்டும் "சரி உன் இஷ்டம் போல் எழுத்துத் துறையில் ஈடுபட்டு முன்னேறு" என்று ஆறுதல் கூறினார்.

எழுத்துப் பணி;

வல்லிக்கண்ணனின் சகோதரர்கள் இருவரும் திருநெல்வேலி டவுனில் தாயருடன் வாடகை வீட்டில் வசித்து வந்தார்கள். ஒருவர் ஒரு மருந்துக் கடையிலும் இன்னொருவர் முனிசிபல் பஸ் நிலையத்தில் கண்காணிப்பாளராகவும் பணிபுரிந்து வந்தார். இவரும் தன் தாயாருடன் வசித்தனர்.
கைவசம் இருந்த அரசுப் பணியையும் ராஜினாமா செய்துவிட்டதால் எழுதுவது, படிப்பது என்றே நாட்களைக் கழித்தார். "பழையக் குருடி கதவைத் திறடி" என்ற பழமொழிக்கு ஏற்ப மீண்டும் 'இதய ஒலி' என்ற கையெழுத்துப் பத்திரிகையைத் தயாரித்தார். பத்திரிக்கையின் பக்கங்களை நிரப்ப அவரே, "நையாண்டி பாரதி, கோர நாதன், மிவாஸ்கி, சொனா முனா, பிள்ளையார்" என்று பல புதிய புனைப் பெயர்களைத் தனக்குத் தானே சூட்டிக் கொண்டு கதை, கட்டுரை, கவிதை என்று எழுதிக் குவித்தார்.

இக்கால கட்டத்தில் 'நவசக்தி'யில் மாதம் தோறும் இவரின் சிறுகதை வெளிவந்தது. கலைமகள் இதழிலும் அவ்வப்போது சில சிறுகதைகள் பிரசுரமாயின. புதுமைப்பித்தன், ந.பிச்சமூர்த்தி, சி.சு.செல்லப்பா, க.நா.சுப்பிரமணியம், ந.சிதம்பரசுப்பிரமணியன் போன்ற பிரபல மணிக்கொடி எழுத்தாளர்களின் கதைகள் அக்கால கலைமகளில் வெளியாயின. அத்தோடு, வல்லிக்கண்ணனின் கதைகளும் கலைமகளில் பிரசுரமானதால், தேர்ந்த இலக்கிய வாசகர்களின் கவனத்தையும் 'வ.க.' பெற்றார்.

1941-ல் திருநெல்வேலியில் 'நெல்லை வாலிபர்கள் சங்கம்' என்ற அமைப்பை ஆரம்பித்தார். அதில் தி.க.சிவசங்கரன் ('இன்றைக்கு மூத்த எழுத்தாளர், இலக்கிய விமர்சகர்') போன்றவர்கள் உறுப்பினராக இருந்தார்கள். அதே கால கட்டத்தில் தொ.மு.சி.ரகுநாதன் "மணி அரசுக் கழகம்" என்ற அமைப்பை ஏற்படுத்தி திருநெல்வேலியில் நடத்திக் கொண்டிருந்தார். அக்கழகத்தின் மூலம் 'மணி அரசு' என்ற கையெழுத்து இதழும் வெளிவந்து கொண்டிருந்தது. 'வ.க.' நடத்திய வாலிபர் சங்க ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப் பிள்ளை கலந்து கொண்டார். விழாவின் அழைப்பிதழில் இடம் பெற்றிருந்த 'பேச்செல்லாம் தமிழினிலே பேசுங்கள்; ஏசுவதெல்லாம் தமிழினிலே ஏசுங்கள்' என்ற 'வ.க'வின் வாசகம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

இலக்கிய அன்பர்களால் அன்போடு 'டி.கே.சி.' என்று அழைக்கப்படும் டி.கே.சிதம்பரநாத முதலியார் திருநெல்வேலி தாமிரபரணி ஆற்றங்கரையில் உள்ள வண்ணார பேட்டையில் வசித்து வந்தார். டி.கே.சி. யின் 'இதய ஒலி' என்ற நூல் வெளியாகி இருந்த தருணம் அது. வ.க.வும் தி.க.சிவசங்கரனும் டி.கே.சி.யை சந்தித்து இலக்கியம் குறித்துப் பேசி மகிழ்கின்றனர். வ.க.வின் படைப்புக்கள் பலவும் தொடர்ந்து சென்னையில் இருந்து வெளிவந்த "நவசக்தி, பாரத சக்தி", கோவையில் இருந்து வெளிவந்த "சினிமா உலகம்" புதுக்கோட்டையில் இருந்து வெளிவந்த 'திருமகள் அணிகலம்', திருச்சியில் இருந்து வெளிவந்த 'கலா மோகினி' போன்ற இதழ்களில் பிரசுரமாயின. அவைகள் அனைத்தும் சிறு பத்திரிக்கைகள் என்பதால், அவைகள் படைப்புகளுக்கு என்று சன்மானம் எதையும் அனுப்பவில்லை. ஆன்ந்த விகடன் பத்திரிக்கையில் வெளியான "புன்னகையும் புது நிலவும்" என்ற சிறுகதைக்காக அப்பத்திரிக்கை பதின்மூன்று ரூபாய் எட்டணா சன்மானம் அனுப்பியது. இதுவே எழுத்துத்துறையில் இவர் பெற்ற முதல் சன்மானமாகும். அதன்பின் காரைக்குடியில் இருந்து வெளிவந்த 'இந்திரா' என்ற மாத இதழ் நடத்திய சிறுகதைப் போட்டியில் இவர் எழுதிய 'தெருக்கூத்து' என்ற சிறுகதை முதல் பரிசைப்பெறுகிறது. அப்பத்திரிக்கை பரிசுத் தொகையாக நூறு

ரூபாயை அனுப்பி வைக்கிறது. எழுத்துத் துறையில் 'வ.க.' பெற்ற முதல் பரிசுத் தொகை இதுவாகும்.

"கிடைத்த சர்க்கார் வேலையை விட்டு, விட்டு, இப்படி வீட்டில் இருந்து கொண்டு, கதைகள், கட்டுரைகள், என்று எழுதிக் கொண்டிருக்கிறானே" என்று இவரின் தாயார் உட்பட உறவினர்கள் பலரும் நேரடியாகவும், மறைமுகமாகவும் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்தார்கள்.

திருநெல்வேலியில் இருந்து கொண்டு சுமார் ஒரு வருட காலமாகப் படிப்பது எழுதுவது என்று பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த வ.க. "ஏதாவது ஒரு பத்திரிக்கையில் சேர்ந்து பணி புரியலாமே!" என்று நினைத்து பத்திரிக்கை உலக நண்பர்களுக்கு கடிதங்களை எழுதுகிறார். ஆனால் ஒருவரிடமிருந்தும் ஆதரவான பதில் இல்லை! எனவே, "நாம் இனியும் வீட்டில் அம்மாவுக்குப் பாரமாக இருக்கக் கூடாது எங்காவது சென்று ஏதேனும் ஒரு பத்திரிக்கையில் சேர்ந்து விட வேண்டும்" என்று மனதளவில் முடிவெடுக்கிறார்.

நடைபயண அனுபவங்கள்:

"புகழ் பெற்ற ஆங்கில நாவலாசிரியரான ஆலிவர் கோல்ட் ஸ்மித் நடந்தே ஐரோப்பா முழுவதும் பயணம் செய்தார். ரஷ்ய எழுத்தாளரான மாக்சிம் கார்க்கி நடந்து, நடந்தே ரஷ்யாவின் நீள, அகலங்களைக் கண்டறிந்தார். இத்தாலிய சர்வாதிகாரியான முசோலினி பையில் மூன்றே மூன்று இத்தாலிய காசுகளோடு தொலைவில் இருந்த கிராமத்திலிருந்து புறப்பட்டு நடந்தே இத்தாலியின் தலை நகரை அடந்தான்" என்றெல்லாம் வரலாற்றில் வரும் நிகழ்வுகளைப் படித்திருந்த வல்லிகண்ணனும், 'அவர்களைப் போல நடந்து சென்றே தனக்கென ஒரு பத்திரிக்கைத்துறை வேலையைத் தேடிக்கொள்ள வேண்டும்' என்று தன் மனதளவில் முடிவெடுக்கிறார்.

1942, மே 24-ம் நாள் இரவு வீட்டிலும் வெளியிலும் யாருக்கும் தெரியாமலும் யாரிடமும் தெரிவிக்காமலும் ஒரு துணிப் பையில் தன் எஸ்.எஸ்.எல்.சி. சான்றிதழ், ஒரு பேனா, சில பேப்பர்கள், இரண்டு

சட்டைகள், இரண்டு வேட்டிகள், ஒரு துண்டு இவற்றோடு, பசி வந்தால் சாப்பிடுவதற்கு என்று ஒரு பொட்டலம் நிறைய அவல் முதலியவற்றைச் சேகரித்து ஒரு பையில் யாருக்கும் தெரியாமல் மறைவான ஒரு இடத்தில் வைத்துக் கொள்கிறார். வீட்டில் அம்மா உட்பட்டவர்கள் தன்னைக் காணோமே என்று கவலைப் பட்டுத் தேடி அலையக் கூடாது என்பதற்காக 'நான் வேலை தேடி வெளியூர் செல்கிறேன்' என்ற விபரத்தை ஒரு கடிதத்தில் எழுதி, அக்கடிதத்தை வீட்டில் உள்ளவர்கள் கண்ணில் படும் படியான ஒரு இடத்தில் வைத்து விட்டுத் தூங்கினார்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து மறைத்து வைத்திருந்த துணிப்பையை மட்டும் எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு நடக்கத் தொடங்குகிறார். நடந்தே சென்னைக்குச் சென்று விட வேண்டும் என்ற வெறியோடு மதுரை ரோட்டில் நடக்கத் துவங்குகிறார். சிறிது தூரம் சென்றதும் ஒரு குளம் வருகிறது. அக்குளத்தின் அருகிலேயே காலைக் கடனைக் கழித்து விட்டு, அக்குளத்திலேயே பல் துலக்கி, குளித்து விட்டு, சிறிது அவலையும் காலை உணவாகச் சாப்பிட்டுக் கொண்டு நடை பயணத்தைத் தொடர்கிறார். சாலையின் இரு மருங்கிலும் மருத மரங்கள் ஓங்கி வளர்ந்திருந்ததால் சாலையில் நிழல் பரவி இருந்தது. எனவே, மத்தியான நேரத்து வெயிலின் கடுமை வரும் வரை சாலை ஓரமாய் நடக்கிறார். இடையில் தண்ணீர் கிடைக்கும் இடங்களில் தாகம் தீர தண்ணீரும் குடித்துக் கொள்கிறார். நண்பகல் நேரம் ஒரு மரத்தடியில் படுத்து ஓய்வு எடுத்துக் கொண்டு பின் வெயிலின் தாக்கம் குறைந்த பிற்பகல் நேரத்தில் மீண்டும் சாலை ஓரமாய் நடக்கத் தொடங்குகிறார்.

இப்படியே கால் வலியும் களைப்பும் வந்த போது மரத்தடியில் படுத்து ஓய்வெடுத்துக் கொண்டு சாலை ஓரமாகவே, மதுரையை நோக்கி நடக்கிறார். இப்படியே நடந்து நடந்து மூன்றாவது நாள் மதுரைக்கு அருகில் உள்ள திருப்பரங்குன்றத்தை அடைகிறார். அங்குள்ள குளத்தில் மக்கள் குளித்துக் கொண்டிருக்கிறார்கள். இவரும் குளத்தில் இறங்கி குளித்து விட்டு மீண்டும் நடந்து மதுரை நகருக்கு ஒரு மைல் வெளியே உள்ள ஒரு கட்டிடத்தை அடைகிறார். அது ஒரு அரசு பயிற்சிப் பள்ளியாகும். அங்கு, ராஜவல்லிபுரத்தைச் சேர்ந்த உறவினர் ஒருவர் பயின்று வருவது இவரின் நினைவுக்கு வருகிறது. எனவே அவரைச்

சந்தித்து அவரிடம் சிறிது பணத்தைக் கடனாகப் பெற்றுக் கொண்டு, மதுரையில் இருந்து ரயில் மார்க்கமாக காரைக்குடி சென்று விடலாம் என்று அவர் மனம் கணக்குப் போடுகிறது. ஏனெனில் அதற்கு மேல் நடக்க முடியாது என்கிற அளவுக்கு அவரின் கால்கள் வீங்கிப் புண்ணாகி விடுகிறது.

அந்த உறவினரின் பெயர் கோபால். இவருக்கு நண்பரும் கூட. இவர் நினைத்தது போலவே அவர் பயிற்சிப் பள்ளிக்கு் போகும் நேரத்தில் அவரைச் சந்தித்து விபரம் கூறுகின்றார். கோபாலும் நிலைமையைப் புரிந்து கொண்டு 'வ.க'விடம் சிறிது பணத்தைக் கொடுத்து, "முதலில் சாப்பிட்டு விட்டு வந்து இங்கு ஒரு கட்டிடத்தின் வராண்டாவில் ஓய்வெடுங்கள். நான் வகுப்பு முடித்து வருகிறேன்" என்று சொல்லி விட்டுச் சென்று விடுகிறார். சாப்பிட்டு மூன்று நாளாகி இருந்ததால் வ.க.வும் கோபாலின் யோசனைப்படியே, அவரிடமிருந்து பணத்தை வாங்கி காலைச் சிற்றுண்டியை ஒரு ஹோட்டலுக்குச் சென்று வயிறாரச் சாப்பிட்டு விட்டு வந்து மீண்டும் அந்தப் பயிற்சிப் பள்ளியின் கட்டிட வராந்தா ஒன்றில் படுத்துக் கொள்கிறார். மதிய உணவுக்கான இடைவேளை நேரத்தில் 'வ.க' படுத்திருக்கும் இடத்திற்கு வந்து அவரின் கால்கள் வீங்கி இருப்பதைக் கவனித்து, "நீங்கள் இன்றைக்கு எங்கும் செல்ல வேண்டாம். என்னுடன் விடுதிக்கு வந்து மதிய உணவைச் சாப்பிட்டு விட்டு விடுதியின் அறையிலேயே படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். நாளைக்கு நீங்கள் காரைக்குடி செல்லலாம்" என்கிறார்.

நண்பரின் யோசனையை ஏற்று அன்று முழுவதும் அந்த விடுதியின் அறையிலேயே படுத்து ஓய்வெடுக்கிறார். எனவே அவரின் கால் வீக்கம் குறைகிறது. மறுநாள் காலையில் நண்பனுடன் சேர்ந்து குளித்து துணி மாற்றிக் கொண்டு சாப்பிட்டு விட்டு, அவர் கொடுக்கும் பணத்தையும் வாங்கிக் கொண்டு, அங்கிருந்து நடந்தே மதுரை ரெயில்வே ஸ்டேசனை அடைகிறார். அங்கு காரைக்குடி செல்லும் ரெயில் வரும் வரைக் காத்திருந்து அதில் ஏறி கரைக்குடி செல்கிறார். 'நடந்தே சென்னை செல்ல வேண்டும்' என்ற 'வ.க.'வின் கனவு அவரின் உடல் நிலை காரணமாக மதுரையுடன் நிறைவடைகிறது. பிற்காலத்தில் சினிமா இயக்குனராகிப் புகழ் பெற்ற ப.நீலகண்டன் தான் அன்று காரைக்குடியில் இருந்து வெளிவந்த 'இந்திரா' என்ற மாத

இதழின் ஆசிரியராக இருந்தார். இதழின் வெளியீட்டாளராக பழனியப்ப செட்டியார் இருந்தார்.

'வ.க.' இந்திரா பத்திரிக்கை அலுவலகத்திற்குச் சென்ற போது அங்கு ப.நீலகண்டனுடன், மணிக்கொடியில் சிறுகதைகள் எழுதிப் புகழ்பெற்ற ஆர்.சண்முகசுந்தரமும், இந்திரா பத்திரிக்கையின் உதவி ஆசிரியரான கோ.த.சண்முகசுந்தரமும் இருக்கிறார்கள். அவர்களிடம் 'வ.க.' தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு தன் பயண நோக்கத்தைத் தெரிவிக்கிறார்.

'வ.க.' வீட்டை விட்டுக் கிளம்பிய அன்று அவரைக்காணாமல் அவரின் தாயார் கலங்குகிறார். தற்செயலாக 'வ.க.' எழுதி வைத்து விட்டு வந்த கடிதம் அவர் சகோதரர் கோமதி நாயத்தின் கண்ணில் பட்டிருக்கிறது. உடனே அவர், 'இவன் பத்திரிக்கைகளில் பணிபுரியும் நோக்கத்தில்தான் சென்றுள்ளான் என்பதைப் புரிந்து கொண்டு, தன் வீட்டில் உள்ள பத்திரிக்கைகளின் முகவரிக்கெல்லாம் "இன்ன மாதிரி என் தம்பி பத்திரிக்கையில் பணி புரியும் நோக்கத்தில் வீட்டில் கூட சொல்லாமல் புறப்பட்டு வந்து விட்டான். அவன் கையில் காக்காசு கூட கிடையாது. எனவே அவன் அங்கு வந்தால் அவனை ஆதரித்து அவனுக்கு வேலை கொடுங்கள். இல்லை என்றால் அவனை வேறு ஏதாவது பத்திரிக்கைக்கு அனுப்பி வையுங்கள் அதுவும் முடியதென்றால் அவனை திருநெல்வேலிக்கே அனுப்பி உதவுங்கள். பணத்தேவைக்கு என் முகவரிக்கு கடிதம் எழுதுங்கள் நான் மணியார்டர் மூலம் உடனே அனுப்பி வைக்கிறேன்" என்ற நீதியில் கடிதங்களை எழுதி இருக்கிறார். 'வ.க' கரைக்குடி வந்து சேரும் முன்பே 'வ.க.'வின் சகோதரர் எழுதிய கடிதம் காரைக்குடியில் உள்ள 'இந்திரா' பத்திரிக்கை அலுவலகத்தை வந்து சேர்ந்திருந்தது. எனவே, 'வ.க.' ஒன்றும் சொல்லாமலேயே அவரின் நிலமை அங்கிருந்தவர்களுக்குப் புரிந்து விடுகிறது.

அது யுத்த காலம், காகிதங்களுக்கும் கடும் கிராக்கி, அத்தோடு பத்திரிக்கைகளின் விற்பனையும் மந்தமாக இருந்தது. ப.நீலகண்டன் "இப்போதைக்கு இந்திரா பத்திரிக்கைக்கு ஆள் தேவையில்லை! ஏற்கனவே இருக்கிற ஆட்களையே கழற்றி விட்டு விடலாமா" என்ற நிலமைதான் இருக்கிறது. எனவே இதே ஊரில்

உள்ள ‘சக்தி’ மாத இதழின் அலுவலகம் சென்று கேட்டுப் பாருங்கள்” என்று சொல்லி துணைக்கு ஆர்.சண்முகசுந்தரத்தையும் அனுப்பி வைக்கிறார். பிற்காலத்தில் “நாகம்மா வா” என்ற நாவலை எழுதிப் புகழ் பெற்ற எழுத்தாளர் ஆர்.சண்முக சுந்தரம் தான் அவர். ‘சக்தி’ பத்திரிக்கையின் ஆசிரியராக வை.கோவிந்தன் இருந்தார். உதவி ஆசிரியராக ‘தி.ஜ.ர.’ என்று அழைக்கப் படும் தி.ஜ.ரங்கநாதன் இருந்தார். சக்தி பத்திரிக்கையும் அப்போது தள்ளாட்டத்தில் தான் இருந்தது.

எனவே அங்கும் வேலை காலி இல்லை ‘வ.க’வின் சகோதரர் எழுதிய கடிதம் சக்தி பத்திரிக்கைக்கு வந்திருந்தது. எனவே, தி.ஜ.ரா., வ.க.வின் சகோதரர் கோமதி நாயகத்திற்கு வ.க. “இங்கு வந்திருந்த விபரத்தையும், இங்கு பத்திரிக்கைத் துறையில் வேலை காலியில்லை எனவே அவரை திருநெல்வேலிக்கே திரும்ப அனுப்பி விடுகிறோம், அது வரை அவர் இங்கே தங்கி இருப்பார். அவரின் வழிச்செலவுக்குத் தேவையான பணத்தை அவர் பெயருக்கு ‘சக்தி’ காரியாலய முகவரிக்கே அனுப்புங்கள்” என்று கடிதம் எழுதுகிறார். சக்தியில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த வீரவநல்லூர்க்காரர், சுந்தரம் என்பவர் விற்பனைப் பிரிவில் பணி புரிந்து வந்தார். அவர் காரைக்குடிக்கு அருகில் உள்ள நேமத்தான்பட்டியில் பள்ளி ஆசிரியராகப் பணி புரிந்து கொண்டிருக்கும் வீ.தி.சொக்கலிங்கம் என்பவருடன் வ.க.வை தங்க வைத்தார். வீ.தி.சொக்கலிங்கம் என்பவருக்கும் இலக்கியத்தில் ஈடுபாடு இருந்தது. அவரும் வீரவநல்லூரைச் சேர்ந்தவர்தான்.

ஒரு வாரம் கழிந்து திருநெல்வேலியில் இருந்து ‘வ.க.’ பெயருக்கு மணியார்டர் வருகிறது. அது வரை நேமத்தான்பட்டியில் உள்ள ஆசிரியருடன் தங்கிக் கொண்டு படிப்பது, எழுதுவது என்று பொழுதைக் கழிக்கிறார். மணியார்டர் மூலம் பணம் கைக்கு கிடைத்த பிறகு, அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டு, திருநெல்வேலிக்கு பஸ்ஸில் செல்கிறார். “போன மச்சான் திரும்பி வந்தான் பூ மணக்க...” என்ற கதையாக தோல்வியுடன் வ.க. திநெல்வேலி திரும்பினாலும், சொல்லாமல் பிரியாமல் சென்ற மகன், “நலமாக வீடு தேடி வந்து விட்டானே!” என்று அவரின் தாய் அகமகிழ்கிறார்.

பத்திரிக்கைப் பணி

இதுவரை ஏற்பட்ட அனுபவத்தில் இருந்து, "நாம் தேடிப் போய் வேலைத் தாருங்கள் என்று கேட்கக் கூடாது. அவர்களாக அழைத்தால் தான் போக வேண்டும்" என்ற முடிவுக்கு வந்தார். 'வ.க.' தனக்குத் தெரிந்த பத்திரிக்கைகளுக்கெல்லாம் வேலை கேட்டுக் கடிதம் எழுதினார்.

புதுக்கோட்டையில் இருந்து வெளிவரும் 'திருமகள்' என்ற பத்திரிக்கையின் ஆசிரியரான ரா.சி.சிதம்பரம் என்பவர் உடனே புறப்பட்டு வந்து பணியில் சேருமாறு கடிதம் எழுதினார். எனவே 'வ.க.' 1943 – ஜனவரி மாதக் கடைசியில் புதுக்கோட்டை போய்ச் சேருகிறார்.

ரா.சி.சிதம்பரம் 'வ.க'வை அன்போடு வரவேற்று அவரை 'திருமகள்' பத்திரிக்கை அலுவலகத்தின் மாடியில் காலியாக இருந்த ஒரு அறையில் தங்கிக் கொள்ளச் சொல்கிறார். சாப்பாட்டிற்கும் அருகில் இருந்த ஒரு ஹோட்டலில் ஏற்பாடு செய்கிறார். இராம .மருதப்பச் செட்டியார் என்பவர் தான் பத்திரிக்கையின் உரிமையாளராக இருந்தார். பத்திரிக்கை சம்மந்தமான வேலைகளை ஒவ்வொன்றாய் சொல்லிக் கொடுத்தார். குறிப்பாக அச்சுக் கோர்த்து வந்த பிரதிகளில் உள்ள பிழைகளை எவ்வாறு நீக்குவது (புரூஃப் பார்ப்பது) என்று கற்றுக் கொடுக்கிறார். மாலை நேரத்தில் உலாவச் செல்லும் போது 'வ.க'வையும் உடன் அழைத்துச் செல்கிறார். இலக்கியம் குறித்து இரண்டு பேரும் பேசி மகிழ்கிறார்கள்.
ஒரு மாதம் கழிந்த பிறகு ஒரு நாள் இரவு வெகு நேரத்திற்குப் பிறகு ரெட்டியார் பத்திரிக்கை அலுவலக மாடிக்கு வந்து 'என்னைத் தேடி யாராவது ஒரு பெண் இங்கு வந்தாளா?' என்று வ.க.விடம் கேட்கிறார்.

வ.க. 'இல்லை' என்று பதில் சொல்கிறார். அதற்குள் அந்தப் பெண்ணும் அங்கு வந்து சேர்கிறார். தூக்கலான மேக்கப் அவர்

குடும்பப் பாங்கான பெண்ணில்லை என்பதைச் சொல்லாமல் சொல்லி விடுகிறது. அந்தப் பெண்ணைக் கண்டதும் ரெட்டியார் அவளுடன் சென்று விடுகிறார். "புதுக்கோட்டைக்கு அருகில் உள்ள கோகர்ணம் என்ற ஊரில் தாசிகள் சில பேர் வசிக்கிறார்கள்" என்று பேச்சோடு பேச்சாக ஒரு நாள் ரா.சி.சிதம்பரம் சொல்லி வைத்தது 'வ.க.'வுக்கு நினைவுக்கு வருகிறது.

செட்டியார் போன பிறகு சிறிது நேரம் கழித்து ஒரு ஆள் வந்து "'ஆச்சி' உங்களைக் கூப்பிடுகிறார்" எங்கிறான். செட்டிநாட்டில், செட்டியார்களின் மனைவியை 'ஆச்சி' என்று அழைப்பது வழக்கம். இதெல்லாம் 'வ.க.'வுக்கு அப்போது தெரியாது. வ.க. எதுவும் புரியாமல் கூப்பிட்டவர் பின்னால் போகிறார். ஆபீசுக்கு சற்று தொலைவில் நிற்கும்பெண் செட்டியாரின் மனைவி என்று அவரை அழைத்துக் கொண்டு சென்ற வேலைக்காரன் சொல்கிறான்.

வ.க.ஆச்சியின் அருகில் சென்றதும் அப்பெண், மிரட்டுகிற தொனியில், "சற்று நேரத்திற்கு முன் செட்டியார் இங்கு வந்தாரா? அவரைத் தேடிக் கொண்டு யாராவது ஒரு பெண் வந்தாளா?" என்று கேட்டுத் துளைத்தெடுக்கிறாள் வ.க. வெள்ளந்தியாக நடந்ததை நடந்த படி ஆச்சியிடம் ஒளிவுமறைவின்றி கூறிவிடுகிறார். மறுநாள் செட்டியாரின் வீட்டில் பெரிய பூகம்பமே வெடித்து விடுகிறது. "செட்டியார் கோவலனைப் போல, அவர் விஷயத்தில் நீர் கண்டும் கணாதது போல் இருந்து கொள்ள வேண்டியது தானே! ஆச்சியிடம் ஏன் உள்ளதைச் சொன்னீர்?" என்று மறுநாள் ர.சி.சிதம்பரமும் வருத்தப் படுகிறார்.

'வ.க.'வின் நிலமை தர்ம சங்கடமாகி விடுகிறது. ஆச்சியின் பெயரில் தான் சொத்து சுகம், வங்கிக் கணக்கு எல்லாம் இருக்கிறது. செட்டியார் வெறும் வெத்து வேட்டு தான். இந்தச் சம்பவத்திற்குப் பிறகு ஆச்சி பணம் கொடுப்பதை நிறுத்தி விடுகிறார். செட்டியார் பத்திரிக்கை நஷ்டத்தில் ஓடுகிறது என்று கணக்குக் காட்டி ஆச்சியிடம் இருந்து பணத்தை வாங்கி சின்ன வீட்டு செட்டப்புக்கு கொடுத்து வந்திருக்கிறார். இப்போது வெள்ளந்தியான 'வ.க.'வின் கூற்றால் செட்டியாரின் 'சாயம்' வெளுத்து விட்டது. இடையில்

அகப்பட்ட ‘திருமகள்’ பத்திரிக்கை தள்ளாட ஆரம்பித்து விட்டது. நாளாவட்டத்தில் , திருமகளில் வேலை பார்த்த அனைவரும் வேறு வேலை தேடிக் கொண்டு வெளியூர் செல்ல வேண்டிய நிலை வந்து விட்டது.
ஒரு நாள் வி.ரா.ராஜகோபாலன் என்பவர் புதுக்கோட்டைக்கு வந்து ‘வ.க.’வுடன் தங்கினார். திருமகள் பத்திரிக்கையின் நிலமையைப் பற்றி விசாரித்தார். அவரிடம் ‘வ.க.’ வும் உள்ள நிலமையை உள்ள படி கூறினார்.

வி.ரா.ராஜகோபாலன், “கோவையில் இருந்து வெளிவரும் ‘சினிமா உலகம்’ என்ற பத்திரிக்கையை பி.எஸ்.செட்டியார் என்பவர் நட்ததுகிறார். நான் அவருக்கு உங்கள் நிலமையை விளக்கிக் கடிதம் எழுதுகிறேன். அவரே உங்களுக்கு கடிதம் எழுதி வரச்சொல்வார். அதன் பின் நீங்கள் இங்கிருந்து சென்றால் போதும்” என்று சொல்கிறார். சொன்னபடியே சினிமா உலகம் பி.எஸ்.செட்டியாருக்கு கடிதமும் எழுதுகிறார்.
பி.எஸ்.செட்டியார் எழுதிய கடிதத்தை மறுநாள் இராம. மருதப்ப செட்டியாரிடம் காட்டி “நான் கோவை செல்ல ஆசைப் படுகிறேன்” என்கிறார் வ.க.

மருதப்பச்செட்டியாரும் வ.க.வுக்கு கைச்செலவுக்குப் பணம் கொடுத்து, வழியனுப்பிவைக்கிறார். ‘வ.க.’ புதுக்கோட்டையில் இருந்து புறப்பட்டு கோவை செல்கிறார். கோவையில் வெரைட்டி ஹால் ரோட்டில் உள்ள ஒரு வீட்டில் குடும்பத்துடன் வசிக்கிறார். அவ்வீட்டின் அறையே ‘சினிமா உலகம்’ பத்திரிக்கை அலுவலகமாக்ச் செயல்பட்டது. பி.எஸ். செட்டியார் வ.க.வை வரவேற்று பத்திரிக்கை அலுவலகமாகச் செயல்படும் அறையிலேயே தங்கிக் கொள்ளச் சொல்கிறார். சாப்பாடிற்கு அருகில் உள்ள ஒரு ஹோட்டலில் ஏற்பாடு செய்கிறார்.

ஆரம்பத்தில் சென்னையில் இருந்து தான் ‘சினிமா உலகம்’ என்ற பத்திரிக்கை வெளிவந்தது. ‘பிலிம் இந்தியா’ என்ற ஆங்கிலப் பத்திரிக்கையைப் பார்த்து அதைப் போலவே தமிழில் இப்பத்திரிக்கையை பி.எஸ்.செட்டியார் நடத்தினார். இவரின் உண்மையான பெயர் பக்கிரிசாமி என்பதாகும். சென்னையில் ஒரு

உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தவர். பத்திரிக்கைத் தொழிலின்பால் உள்ள மோகத்தால், தான் பார்த்து வந்த ஆசிரியப் பணியை ராஜினாமா செய்துவிட்டு, இப்பத்திரிக்கையைத் தொடங்கி நடத்தி வந்தார். இப்பத்திரிக்கை சென்னையில் இருந்து வெளிவந்த போது அதன் வளர்ச்சிக்காக, புகழ் பெற்ற வசனகர்த்தாவான இளங்கோவன், கவி.க.அ.து. யோகியார், பாரதிதாசன் போன்றோர் உழைத்துள்ளார்கள்.

கோவையிலும், சென்னையைப் போல பல சினிமா கம்பெனிகள் செயல்பட்டு வந்ததால் தான் பி.எஸ்.செட்டியார் 'சினிமா உலக'ப் பத்திரிக்கை அலுவலகத்தை சென்னையிலிருந்து கோவைக்கு மாற்றியிருந்தார்.

வல்லிக்கண்ணனின் அயராத உழைப்பையும், ஈடுபாட்டையும் பார்த்த பி.எஸ்.செட்டியார் 'சினிமா உலகம்' பத்திரிக்கையில் 'ஆசிரியர்: பி.எஸ்.செட்டியார், உதவி ஆசிரியர்: வல்லிக்கண்ணன்' என்று பிரசுரம் செய்தார்.
தபால் பார்ப்பது, புரூஃப் திருத்துவது, பத்திரிக்கைகளை அனுப்புவது 'மேட்டர்'களை எழுதுவது என்று அத்தனை வேலைகளையும் தலை மேல் இழுத்துப் போட்டுக் கொண்டு 'சினிமா உலகம்' பத்திரிக்கைக்காக அயராது உழைத்தார் வல்லிக்கண்ணன் என்றாலும், மாதச் சம்பளம் என்று நிர்ணயித்து சம்பளம் எதுவும் வல்லிக்கண்ணனுக்கு செட்டியார் கொடுக்கவில்லை. 'வ.க.' கேட்ட போதெல்லாம் அவ்வப்போது கைச்செலவுக்குப் பணம் கொடுத்தார்.

அக்காலக்கட்டத்தில் தான் டி.கே.எஸ்.சகோதரர்களின் நாடக சபை பாலக்காட்டில் முகாமிட்டு நாடகங்களை நடத்திக் கொண்டிருந்தது. டி.கே.எஸ். சகோதரர்களை பேட்டிகாண வல்லிக்கண்ணனை பி.எஸ்.செட்டியார் பாலக்காட்டிற்கு அனுப்பினார். வல்லிக்கண்ணன் டி.கே.எஸ்.சகோதரர்களைப் பேட்டி கண்டார். அன்று முதல் டி.கே.சண்முகத்திற்கு வல்லிக்கண்ணனை மிகவும் பிடித்துப் போயிற்று.

சுமார் ஒன்பது மாதங்கள் கோவையில் தங்கி இருந்தார் 'வ.க'. 'சினிமா உலகம்' சினிமா சம்பந்தப்பட்ட பத்திரிக்கை

என்பதால், 'வ.க.' வின் மனம் அதில் வெகுவாக ஈடுபடவில்லை என்றாலும், யாரும் குறை சொல்ல முடியாதபடி உழைத்தார். சென்னை சென்று ஏதாவது ஒரு இலக்கியப் பத்திரிக்கையில் பணியாற்ற வேண்டும் என்று அவர் மனம் எண்ணியது. பி.எஸ்.செட்டியாரும், அவரின் குடும்பத்தாரும் 'வ.க.' விடம் மிகவும் அன்போடு பழகினார்கள். எனவே பி.எஸ்.செட்டியாரிடம் நேரடியாக தான் சென்னை செல்ல விரும்புவதை சொல்ல 'வ.க.'வுக்கு மனம் வரவில்லை. என்றாலும் சென்னை செல்ல மனம் ஏங்கியது. எனவே தன் மன நிலையை விளக்கி ஒரு கடிதத்தை எழுதி செட்டியாரிடம் கொடுத்தார் வ.க. கடிதத்தைப் படித்தாலும் கடின உழைப்பாளியான சம்பளம் வாங்காத ஊழியரான 'வ.க.'வை இழக்க செட்டியாரின் மனம் இடம் தரவில்லை. எனவே, 'அடுத்த மாதம் போங்கள்' என்று ஆறுதல் மொழி கூறி வைத்தார்.

எனவே வேறு வழியில்லாமல் 'வ.க.', 'நான் என் தாயாரைப் பார்த்து பத்து மாதங்களுக்கு மேலாகிறது. அவரைப் பார்க்க ஆசையாக இருக்கிறது' என்று கூறி திருநெல்வேலிக்குப் போகப் போவதாகச் சொன்னார். இதற்கு மேல் இவரைத் தடுத்து நிறுத்த முடியாது என்று நினைத்த செட்டியார் 'வ.க.'வை அனுப்பி விட்டார். 'வ.க.' கோவையிலிருந்து புறப்பட்டு நேரே ரெயில்வே ஸ்டேசன் வந்து சென்னைக்குச் சென்று விட்டார். 1943- டிசம்பரில் நவசக்தியில் சேர்ந்தார். வ.ரா.(வ.ராமஸ்வாமி) நவசக்தியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதிக் கொண்டிருந்த காலக்கட்டம் அது. அப்போது சென்னையில் ரோடு நடுவில் இரும்புத் தண்டவாளங்கள் பதிக்கப்பட்டு இருந்தன. அதில் டிராம் வண்டிகள் ரயில் பெட்டி போல சென்றன. அதில் ஏறி மக்கள் பயணம் செய்து வந்தார்கள். ஓய்வு கிடைக்கும் நேரத்தில் வல்லிக்கண்ணன் டிராம் வண்டியிலும் பஸ்ஸிலும் பயணம் செய்து சென்னை மாநகரின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்தார். திருலோக சீதாராமன் என்பவர் 'வ.க.'வை சில எழுத்தாளர்களின் வீட்டிற்கும் அழைத்துச் சென்று 'வ.க.'வை அறிமுகப்படுத்தி வைத்தார். நாரணதுரைக் கண்ணன், கி.வா.ஜகந்நாதன், கா.ஸ்ரீ.ஸ்ரீனிவாஸாச்சார்யா பேராசிரியர் கே.சுவாமிநாதன், அ.கி.ஜெயராமன், சிதம்பரசுப்பிரமணியன், பா.ரா. புதுமைப்பித்தன் போன்ற எழுத்தாளர்களை நேரில் சந்தித்து

உரையாடுகின்ற வாய்ப்பு 'வ.க.'வுக்கு முதன் முதலில் இப்படித்தான் கிடைத்தது.

சென்னையில் உள்ள யுனிவர்சிட்டி லைபிரரி 'வ.க.'வின் வாசிப்பு தாகத்தைத் தீர்த்து வைத்தது. இந்நிலையில் நாடக நடிகர் டி.கே.சண்முகத்திடமிருந்து முதலாவது நாடகக் கலை மாநாட்டுக்குக்கான அழைப்பிதழும், "தாங்கள் நேரில் வந்து என்னைச் சந்தியுங்கள், உங்களிடம் தனியாகப் பேச வேண்டும்" என்ற கடிதமும் வந்தது.

மாநாட்டில் கலந்து கொள்ள 'வ.க.' ஈரோடு சென்றார். நாடகக் கலை விழா மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாநாட்டிற்கு பொருளாதார மேதை ஆர்.கே.சண்முகம் செட்டியார், தலைமை வகித்தார். சி.என்.அண்ணா துரை, என்.எஸ்.கிருஷ்ணன் முதலியோர் சிறப்புரையாற்றினார்கள்.

மாநாட்டில் நாடகக்கலையை வளர்க்க 'நாடகம்' என்றொரு இதழை நடத்துவது என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. "'நாடகம்' என்ற இதழின் ஆசிரியர் பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று நடிகர் டி.கே.சண்முகம் 'வ.க.'வை கேட்டுக்கொண்டார். ஆனால் டி.கே.எஸ்.ஸின் அந்த வேண்டுகோளை 'வ.க.' ஏற்க மறுத்து விட்டார். அதனால் 'நாடகம்' என்ற இதழ் துவங்கும் எண்ணம் முளையிலேயே கருகியது.

துறையூரில் வாழ்ந்த அனுபவம்:

ஈரோட்டில் இருந்து சென்னை வந்த 'வ.க.'வை அ.வெ.ர.கி. செட்டியார் சந்தித்து "துறையூரில் இருந்து வெளிவரும் கிராம ஊழியன் பத்திரிக்கையில் பணிபுரிய வாருங்கள்" என்று அழைத்தார். 'வ.க.'வும் கிராம ஊழியனில் பணிபுரிய விரும்பினார். எனவே நவசக்தியின் ஆசிரியர் சக்திதாசனிடம் விடைபெற்றுக் கொண்டு 'வ.க.' 1944 – பிப்ரவரி இறுதியில் துறையூர் சென்றார்.

திருச்சிராப்பள்ளியில் இருந்து 28 மைல் தொலைவில் உள்ள

சின்னஞ்சிறு கிராமம் துறையூர் 'சாவடி' போன்ற நீளமான ஓட்டுக் கட்டிடத்தில் அமைக்கப்பட்டிருந்த அச்சகத்தில் 'கிராம ஊழியன்' என்ற பத்திரிக்கை அச்சிடப் பட்டது. பத்திரிக்கை பெயருக்கு ஏற்ற படி கிராமத்தில் இருந்து வெளிவந்தது. இங்கு தான் 'வ.க.'வுக்கு மாதம் ரூபாய் 25 சம்பளம் என்று பேசி ஊதியம் வழங்கப் படுகிறது. அத்தோடு நியமன உத்தரவும் தரப்பட்டது. அ.வெ.ர.கி.செட்டியாரும், திருலோகசீத்தாராமும் பத்திரிக்கையின் நிர்வாக விஷயங்களைக் கவனித்துக் கொண்டார்கள். கு.பா.ராஜகோபாலன், தி. ஜானகிராமன், கரிச்சான்குஞ்சு, எம்.வி.வெங்கட்ராம், கி.ரா.கோபாலன் போன்ற கும்பகோணத்து எழுத்தாளர்களின் கதைகள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள், படைப்புகள் வந்தன. கும்பகோணம் ஓவியக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த கோபுலு, ஸாரதி போன்றவர்கள் பிரசுரிக்கத் தேர்ந்தெடுத்த படைப்புகளுக்குப் பொருத்தமான ஓவியங்களை வரைந்து கொடுத்தார்கள். 'கு.ப.ரா.', நா.பிச்சமூர்த்தி என்ற இலக்கிய இரட்டையர்களிடம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு அப்போது தான் 'வ.க.'வுக்குக் கிடைத்தது. சிட்டி, பெ.கோ.சுந்தர்ராஜன் போன்ற எழுத்தாளர்களின் நட்பும் அவருக்கு இங்கே கிடைத்தது. 'தி.ஜா'வின் முதல் நாவலான 'அமிர்தம்' கிராம ஊழியனில் தான் தொடராக வெளி வந்தது.

'நையாண்டி பாரதி' என்ற புதிய புனைப்பெயரில் 'வ.க.' சமூக விமர்சனம் சார்ந்த கட்டுரைகளைத் தொடர்ந்து கிராம ஊழியனில் எழுதினார். 'பாரதிதாசனின் உவமை நயம்' என்று வ.க. கிராம ஊழியனில் ஒரு தொடர்கட்டுரை எழுதினார். பாவேந்தரே அக்கட்டுரைகளைப் படிக்கிறார். ஒரு முறை 'வ.க.' வை நேரில் சந்தித்த போது பாவேந்தர் "பார்க்க சின்னப் பையன் மாதிரி இருக்கிறே! நீயா இக்கட்டுரைகளை எழுதினாய்?" என்று ஆச்சிரியத்துடன் வினவுகிறார். அத்தோடு, "கட்டுரை எழுதுவதோடு நிறுத்திக்கொள், உன் போட்டோவை பத்திரிக்கையில் வெளியிடாதே!" என்று ஆலோசனையும் கூறுகிறார்.

'இலங்கையில் வாழ்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகளை வாங்கி கிராம ஊழியனில் பிரசுரிக்க வேண்டும்' என்று நினைத்த 'வ.க.' இலங்கை எழுத்தாளர்களுக்கு கடிதம்

எழுதுகிறார். அப்போதைய இலங்கையின் முன்னோடி தமிழ் எழுத்தாளர்களான சி.வைத்தியலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன் போன்றோர் சிறுகதைகளையும் சோ.தியாகராசா, ச.அம்பிகைபாலன் போன்றவர்கள் கட்டுரைகளையும் அனுப்புகிறார்கள். அவைகளை 'வ.க.' கிராம ஊழியனில் தொடர்ந்து பிரசுரம் செய்கிறார். தமிழ் நாட்டில் உள்ள வாசகர்கள் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களின் இலக்கியப் படைப்புகளைத் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பை இதன் மூலம் 'வ.க.' ஏற்படுத்திக்கொடுத்தார். கிராம ஊழியன் பத்திரிக்கையின் ஆசிரியர் பொறுப்பில் இருந்த திருலோகசீத்தாராம், அதிலிருந்து விலகி திருச்சியில் இருந்து புதிதாக வெளிவர இருக்கும் 'சிவாஜி' என்ற வார இதழில் சேர்கிறார். எனவே கிராம ஊழியன் இதழின் ஆசிரியர் பொறுப்பை 'வ.க.' ஏற்றுக் கொள்கிறார்.

'வ.க.'ஆசிரியர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, கிராம ஊழியனில் ராசிபுரம் தனுஷ்கோடி. தி.க.சிவசங்கரன் என்ற தி.க.சி.சிட்டி, சுப.நாராயணன், கு.ப.ரங்காச்சாரி (பராங்குசம்) போன்றோர் புதிதாக இதில் எழுத ஆரம்பித்தார்கள். 'வ.க.'வும் பாரதியாரின் கவிதைகளை மையமாகக் கொண்டு "பாரதி அடிச் சுவட்டில்..." என்ற கட்டுரைத் தொடரை எழுதினார். அவைகள் வாசகர்களின் வரவேற்பைப் பெற்றது.

'வ.க.' வசனம் எழுதவில்லை! 'வ.க.'விற்கு "சினிமாவுக்கு எழுதி நிறைய பணம் சம்பாதிக்க வேண்டும், பேரும் புகழும் சம்பாதிக்க வேண்டும்" என்ற எண்ணமெல்லாம் இல்லை. அவர் மனம் இலக்கியத் துறையில் சாதனை படைக்கவே விரும்பியது. 'கிராம ஊழியன்' இதழ் நின்றுவிட்ட பிறகும், 'வ.க.' பல மாத காலம் துறையூரிலேயே இருந்தார். ஆரவாரவமற்ற அந்த கிராமத்து வாழ்க்கை அவருக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. 'கிராம ஊழியன்' பத்திரிக்கை நின்று விட்ட பிறகும் 'வ.க.' துறையூரிலேயே இருப்பதைக் கேள்விப்பட்டு எம்.கே.டி.சுப்பிரமணியன் என்பவர் 'வ.க.'வுக்கு "சென்னைக்கு வாருங்கள், ஒரு பத்திரிக்கை ஆரம்பிக்கலாம்" என்று அடிக்கடி கடிதம் எழுதிக் கொண்டிருந்தார்.

எம்.கே.டி.சுப்பிரமணியன் திராவிட இயக்கச் சிந்தனையாளர் 'வ.க.' கோரநாதன் என்ற பெயரில் எழுதிய கட்டுரைகளைப் படித்து விட்டு அவரை ஆசிரியராகக் கொண்டு 'தீப்பொறி' என்ற பெயரில் மாதம் இரு முறை வரும் பத்திரிக்கை ஒன்றை நடத்த ஆசைப்பட்டார். 'வ.க.'வும் அவரின் விருப்பத்தை ஏற்று 'தீப்பொறி' இதழின் ஆசிரியர் பொறுப்பை ஏற்க சென்னை வந்தார். 'தீப்பொறி' இதழும் திட்டமிட்ட படி ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் பத்தாவது இதழுடன் 'தீப்பொறி' அணைந்து விட்டது. பத்திரிக்கை ஆசிரியர் பணி நின்றாலும் 'வ.க.' சிறுகதைகளை எழுதிக் கொண்டிருந்தார். அவைகள் பரவலாக பத்திரிக்கைகளில் பிரசுரமாகிக் கொண்டிருந்தன.

1948-ன் இறுதியில் தி.க.சிவசங்கரன் (தி.க.சி) திருநெல்வேலி தாம்ஸ்கோ வங்கியில் இருந்து மாறுதலாகி சென்னை வந்தார். அவரும் அருகில் சில காலம் 'வ.க.'வுடன் தங்குகிறார். அக்கால கட்டத்தில் 'சினிமா உலகம்' மீண்டும் 'வ.க.'வை அழைக்கிறது. "பாலாஜி பிக்சர்சார் தயாரிக்கவிருந்த லைலா மஜ்னு என்ற திரைப்படத்திற்கு வசனம் எழுத வேண்டும்" என்று கணபதி ஐயர் என்பவர் மிகவும் வற்புறுத்தியதால், அந்த நாட்களில் பத்திரிக்கை வேலை எதுவும் இல்லாததால் 'வ.க.'வும் அரைகுறை மனதுடன் அப்படத்திற்கு வசனம் எழுத ஒப்புக் கொள்கிறார். ஒப்புக்கொண்ட படியே 'வ.க.' சில காட்சிகளுக்கு மட்டும் வசனம் எழுதிக் கொடுத்தார். அதற்காக சன்மானமும் ஆயிரம் ரூபாய் கொடுத்தார்கள். படத்தில் வசனம்: வல்லிகண்ணன் என்று விளம்பரப் படுத்தி இருந்தார்கள். அதன் பிறகும் சில சினிமாப் படங்களுக்கு வசனம் எழுதும் வாய்ப்பு 'வ.க.'வுக்கு வருகிறது. அதனால் அப்படங்களுக்கு 'வ.க.' வசனம் எழுதிக் கொடுக்க முன்வரவில்லை.

சென்னையில் 'வ.க.'

சென்னையிலேயே அமைதியான ஒரு இடத்திற்கு குடிபோக வேண்டும் என்று 'வ.க.'வும் அவர் சகோதரரும்

நினத்தார்கள். அவர்களின் எண்ணம் ஈடேரும் விதத்தில் கிருஷ்ணாம் பேட்டை E டிப்போத் தெருவில் ஒரு தோட்ட வீடு கிடைத்தது. அந்த பத்தாம் எண் வீட்டில் சுமார் 15 ஆண்டுகள் 'வ.க.' குடியிருந்தார். அந்த 10-ம் நம்பர் வீட்டிற்கு பெயர் பெற்ற எழுத்தாளர்கள், பத்திரிக்கையாளர்கள், நடிகர்கள், அரசியல்வாதிகள், இளைய எழுத்தாளர்கள் என்று பலரும் வந்து சென்றிருக்கிறார்கள். 1950, 1951 ஆகிய இரண்டாண்டுகள் 'ஹனுமன்' இதழில் பணியாற்றினார். 'செவ்வானம்', 'அடுத்த வீட்டுக்காரி' என்ற தொடர்கதைகளை 'ஹனுமனில்' எழுதினார். ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் 'தமிழ் முரசு' என்ற இதழுக்கும் கதைகளையும் கட்டுரைகளையும் எழுதி அனுப்பிக் கொண்டிருந்தார்.

வாத்தியார் நடராஜர் என்பவர் ஒரு நாடகம் நடத்த விரும்பினார். அவர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க 'விடியுமா?' என்ற நாடகத்தை 'வ.க.' எழுதிக்கொடுத்தார். நாடக அரங்கேற்றத்திற்கு பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் க.அன்பழகன் தலைமை வகிக்க, அந்நாளைய பிரபல திரைப்பட இயக்குநர் கே.சுப்பிரமணியம் என்பவர் வாழ்த்திப் பேசியிருக்கிறார். சிங்கப்பூரில் இருந்து வெளிவரும் 'தமிழ் முரசு' உட்பட பல பத்திக்கைகள் 'வ.க.'வை அழைத்தன. ஆனால் அவ்வழைப்புகளை எல்லாம் ஏற்காமல் 'வ.க.' வீட்டில் இருந்து கொண்டு, எழுதுவது, படிப்பது என்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார்.

அப்போது மீண்டும் திரைப்பட இயக்குநர் ப.நீலகண்டன் மூலமாக திரைப்படத்திற்கு வசனம் எழுதும் ஒரு வாய்ப்பு 'வ.க.'வைத் தேடி வருகிறது. அதையும் 'வ.க.' தட்டிக்கழித்து விடுகிறார். 1951-ல் 'ஹனுமன்' வார இதழில் இவர் தொடராக எழுதிய கதை துறையூர் எரிமலைப் பதிப்பகம் வாயிலாக நாவலாக வெளிவந்தது.

1954-ல் கயிலைப் பதிப்பகம் வாயிலாக இவர் எழுதிய சிறுகதைகள் 'வல்லிக்கண்ணன் கதைகள்' என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. சரஸ்வதி, தாமரை போன்ற இதழ்கள் தொடர்ந்து 'வ.க.'வின் கதைகளையும், கட்டுரைகளையும் பிரசுரித்து வந்தன. 1556-ல் டால்ஸ்டாய் கதைகள் சிலவற்றை தமிழாக்கம்

செய்தார். அக்கதைகள் அலையன்ஸ் பப்ளிகேஷன்ஸ் மூலமாக புத்தகமாக வெளிவந்தது. மார்சிம் கார்க்கியின் "டேல்ஸ் ஆப் இத்தாலி" என்ற தொகுப்பிலிருந்து சில கதைகளை மொழிபெயர்த்தார். அவைகள் வெண்புறா வெளியீடாகப் பிரசுரம் பெற்றது.

இவர் மொழி பெயர்த்த கார்க்கியின் கட்டுரைகள் 1957-ல் புத்தகமாக வெளிவந்தது. கார்க்கியின் கதைகள் சிலவற்றையும் 'வ.க.' மொழி பெயர்த்தார். அவை 'சின்னஞ்சிறு பெண்' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்தது.

ராபர்ட் ரூஆர்க் எழுதிய 'ஓல்ட் மேன் அன்ட் தி பாய்' என்ற ஆங்கிலப் புத்தகத்தை 'தாத்தாவும் பேரனும்' என்ற தலைப்பில் மொழி பெயர்த்தார். இப்படி 'வ.க.' மொழிபெயர்ப்புத் துறையிலும் கால் பதித்து வெற்றிக்கொடி நாட்டியுள்ளார்.
சி.சு.செல்லப்பாவின் எழுத்துப் பிரசுரம் வாயிலாக 'வ.க.'வின் 'ஆண் சிங்கம்' என்ற சிறுகதைத் தொகுப்பு வெளியிடப்படுகிறது. 'அமர வேதனை' என்ற 'வ.க.'வின் கவிதைத் தொகுப்பு நூல் ஒன்றும் எழுத்துப் பிரசுரம் மூலமே வெளிவருகிறது.
பிற்காலத்தில் சாகித்திய அகாதெமி விருது பெற்ற புதுக்கவிதையின் 'தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூலும் எழுத்துப் பிரசுரம் மூலமே வெளியிடப் பட்டது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.
1965-ல் 'சரஸ்வதி' இதழில் 'உதிரிப் பூக்கள்' என்ற தலைப்பில் இவர் எழுதிய கட்டுரைகள் கலைஞன் பதிப்பகம் மூலமாக 'முத்துக் குளிப்பு' என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது.
1966-ல் சிவாஜி வார இதழில் 'வ.க.' 'மூடுபனி' என்ற தலைப்பில் எழுதிய தொடர்கதை, "வசந்தம் மலர்ந்தது" என்ற பெயரில் கலைஞன் பதிப்பகம் மூலமாக நாவலாக வெளியிடப்படுகிறது.
1967-ல் 'காவேரி பதிப்பகம்' 'வ.க.'வின் 'வீடும் வெளியும்' என்ற நாவலை பிரசுரம் செய்தது. இது 'செங்கோல்' என்ற பத்திரிக்கையில் தொடர்கதையாக வெளிவந்ததாகும்.

'ஹனுமன்' என்ற வார இதழில் பிரசுரமான 'அடுத்த வீட்டுக்காரி' என்ற இவரின் தொடர்கதை 'சகுந்தலை' என்ற பெயரில் நூலாக

வெளிவந்துள்ளது.

பிறந்த மண்ணைத் தேடி...

'வ.க.' சென்னையில் வசித்தாலும் ஆண்டு தோறும் தன் சொந்த ஊரான ராஜவல்லிபுரத்தில் சுமார் மூன்று மாதங்கள் தங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். எனவே இவரின் நண்பர்கள் "'வ.க.' விக்கிரமாதித்யன் நாடாறு மாதம் காடாறு மாதம் வசிதத்தைப் போல சென்னையிலும் ராஜவல்லிபுரத்திலுமாக வசிக்கிறார்" என்று கேலி பேசுவதுண்டு.

ராஜவல்லிபுரத்தின் அருகில் ஓடுகிற தாமிரபரணி ஆறும், அதன் சூழலில் நிலவுகிற அமைதியும் அழகும் இவருக்கு அளவில்லா மகிழ்ச்சியைத் தந்தன. காலையிலும் மாலையிலும் தனிமையில் ஆற்றுக்குப் போய் குளித்துவிட்டு அங்கேயே மர நிழலில் அமர்ந்து பொழுது போக்குவது என்பது இனிய அனுபவங்களாக அமைந்தது. ராஜவல்லிபுரத்தில் அவர்களுக்குச் சொந்தமாகப் பெரிய வீடு இருந்தது. அங்கு 'வ.க.'வின் அம்மாவும் மூத்த சகோதரர் கலியாணசுந்தரமும் வசித்து வந்தார்கள். மூத்த சகோதரருக்கு ஒரே ஒரு மகள் மட்டும் இருந்தாள். சகோதரர் மனைவி இளம் வயதிலேயே இறந்து விட்டாள். 'வ.க.' சின்ன வயதில் இருந்தே 'திருமணம் செய்து கொள்ள வேண்டாம்' என்று முடிவெடுத்து விட்டார். எனவே 1963-ல் இவரின் மூத்த சகோதரர் கோமதிநாயகம் தன் நாற்பத்தைந்தாவது வயதில் மறுமணம் செய்து கொள்கிறார். 1972 முதல் தாயாரின் உடல் நலம் கருதி ராஜவல்லிபுரத்தில் வசிக்கத் தொடங்கினார். ஒரு காலத்தில் வளமாக இருந்த குடும்பத்தில் வறுமை வந்து சூழத் தொடங்கியது. தாயாரின் மருத்துவச் செலவு, அண்ணன்மார்களின் குடும்பச் செலவு என்று செலவுகள் அதிகரிததால், ராஜவல்லிபுரத்தில் இருந்த அவர்களின் வயல், தோட்டம் முதிலியவற்றை சிறிது சிறிதாக விற்க வேண்டியதாயிற்று. 1973-ல் 'வ.க.'வின் தாயார் இறந்து போகிறார். தொடர்ந்து 1974-ல் 'வ.க.'வின் மூத்த சகோதரர் இறந்து விடுகிறார். எனவே 1972- முதல் வ.க. இரண்டாண்டுகள் ராஜவல்லிபுரத்திலேயே வசிக்கிறார்.


இந்தக் கால கட்டத்தில் தான், திருநெல்வேலி மற்றும் சுற்று

வட்டரத்தில் வசித்து வந்த இலக்கிய இளவல்களான வண்ணதாசன், வண்ணநிலவன், நம்பிராஜன், கலாப்பிரியா போன்றவர்களும் கி.ராஜநாராயணன் (கி.ரா) தீப.நடராஜன் (ரசிகமணி டி.கே.சியின் பேரன்) ராஜபாளையத்தைச் சேர்ந்த த.பி.செல்வம், கொ.ச.பலராமன், சுப.கோ.நராயணசாமி, கோ.மா.கோதண்டம் தஞ்சையை சேர்ந்த பிரகாஷ் போன்றோர் அடிக்கடி ராஜவல்லிபுரம் வந்து ‘வ.க.’வுடன் உறவாடி விட்டுச் சென்றார்கள். ‘வ.க.’வின் தாயார் உயிரோடு இருக்கும் போதே வீட்டு வேலைகளைச் செய்ய என்று ஒரு மூதாட்டி வ.க.வின் வீட்டில் இருந்தாள். வ.க.வின் தாயார் இறந்த பிறகும் அந்தம்மாவே வ.க.வுக்குச் சமையல் செய்து கொடுத்து வீட்டு வேலைகளையும் செய்து வந்தார்.

ராஜவல்லிபுரத்திலும் படிப்பது, எழுதுவது என்றே ‘வ.க.’ பொழுதைக் கழித்தார். தன்னைத் தேடி வரும் இலக்கிய தாகம் கொண்ட இளவல்களிடம் எப்படி எழுதுவது, என்னென்ன நூல்களைப் படிப்பது என்று அவர்களுக்குப் பயிற்சி கொடுத்தார். தனக்கு வருகின்ற புத்தகங்களை அதுவும், புதிய எழுத்தாளர்கள் எழுதிய புத்தகங்களை உடனுக்குடன் படித்து அப்புத்தககத்தில் உள்ள நிறை குறைகளைப் பற்றியும் உடனுக்குடன் கடிதங்களை எழுதி அவர்களை உற்சாகப் படுத்தினார்.

இந்து தமிழ் திசை

வல்லிக்கண்ணன்



https://www.hindutamil.in/news/blogs/63933-10.html

புகழ்பெற்ற எழுத்தாளர், விமர்சகர்

புகழ்பெற்ற எழுத்தாளரும், சாகித்ய அகாடமி விருது பெற்றவருமான வல்லிக்கண்ணன் (Vallikannan) பிறந்த தினம் இன்று (நவம்பர் 12). அவரைப் பற்றிய அரிய முத்துக்கள் பத்து:

திருநெல்வேலி மாவட்டம், ராஜவல்லி புரத்தில் நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தவர் (1920). இயற்பெயர் ரா.சு. கிருஷ்ணசாமி. கோவில்பட்டியில் ஆரம்பக் கல்வி பயின்றார். தந்தை சுங்கத் துறையில் பணிபுரிந்து வந்தார். அவருடன் பிரபல நாவலாசிரியர் அ.மாதவையாவும் பணி யாற்றி வந்தார். அந்தக் காலகட்டத்தில் மாதவையா நடத்தி வந்த பஞ்சாமிர்தம் இதழ்கள் பற்றி தந்தை அடிக்கடி வீட்டில் பேசுவார்.

இதுவே சிறுவனுக்கு இலக்கிய ஆர்வம் ஏற்படக் காரணமாக அமைந்தது. இவரது 10-வது வயதில் தந்தை இறந்துவிட்டார். தனது 16-ம் வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கிவிட்டார். 'சந்திரகாந்தக் கல்' என்ற இவரது முதல் சிறுகதை பிரசண்ட விகடனில் வெளிவந்தது.

1937-ல் பள்ளி இறுதிப் படிப்பை முடித்த இவருக்கு பரமக்குடியில் வேளாண்மை விரிவாக்கப் பணியாளர் வேலை கிடைத்தது. எழுத்தின் மீது கொண்ட ஆர்வத்தால் அந்த வேலையை உதறிவிட்டு முழு நேர எழுத்தாளனாக மாறினார். ஆரம்பத்தில் சினிமா உலகம், நவசக்தி, கிராம ஊழியன், ஹனுமான் ஆகிய சிறுபத்திரிகைகளில் பணிபுரிந்துள்ளார்.

'கோவில்களை மூடுங்கள்', 'அடியுங்கள் சாவு மணி', 'எப்படி உருப் படும்?', 'கொடு கல்தா' உள்ளிட்ட நூல்களை கோரநாதன் என்ற பெயரில் கோபக்கார இளைஞனாக எழுதத் தொடங்கிய இவரது இலக் கியப் பயணம், புனைவுகள், திறனாய்வு, சிறுபத்திரிகை, புதுக்கவிதை வரலாறு எனப் பன்முகப் பரிமாணங்களுடன் தொடர்ந்தது.

நையாண்டி பாரதி, கோரநாதன், மிவாஸ்கி, வேதாந்தி, பிள்ளையார், தத்துவதரிசி, அவதாரம் போன்ற பல புனைபெயர்களிலும் எழுதியுள்ள

இவர், தனது ஊர் பெயரில் உள்ள வல்லி மற்றும் தனது செல்லப் பெயரான கண்ணன் ஆகியவற்றை இணைத்து வல்லிக்கண்ணன் என்று பெயர் சூட்டிக்கொண்டார். இதுவே இவரது பெயராக நிலைத்துவிட்டது.

நாட்டியக்காரி, குஞ்சாலாடு, மத்தாப்பு சுந்தரி, கேட்பாரில்லை, அத்தை மகள், சகுந்தலா, ஆண் சிங்கம், அமர வேதனை, ராகுல் சாங்கிருத்யாயன் உள்ளிட்ட மொத்தம் 75 நூல்களை எழுதியுள்ளார்.

இரண்டு வாழ்க்கை வரலாற்று நூல்களையும் எழுதியுள்ளார். இவரது 'பெரிய மனுஷி' என்ற சிறுகதை பல இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டது. இவரது 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற இவரது நூலுக்காக 1978-ல் இவருக்கு சாகித்ய அகாடமி விருது கிடைத்துள்ளது.

'வல்லிக்கண்ணன் சிறப்புச் சிறுகதைகள்' என்ற நூல் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2002-ம் ஆண்டுக்கான சிறந்த நூல்களின் சிறுகதைப் பிரிவில் பரிசு பெற்றுள்ளது. புதிய எழுத்தாளர்களை அரவணைத்து ஊக்கப்படுத்தியவர் வல்லிக்கண்ணன்.

பாரதிதாசனின் உவமை நயம், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும், சரஸ்வதி காலம், பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை ஆகிய படைப்புகள் இவரது இலக்கிய அடையாளங்களாகக் கருதப்பட்டன. சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், கட்டுரை ஆகிய இலக்கியத்தின் அனைத்துத் துறைகளிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

ஒல்லிக்கண்ணன் என்று எழுத்தாள நண்பர்கள் குறிப்பிடும் அளவுக்கு ஒல்லியான தேகம் படைத்தவர். சுமார் 75 ஆண்டு காலம் இலக்கியத்துக்கே தன்னை அர்ப்பணித்துக்கொண்ட வல்லிக்கண்ணன் 2006-ம் ஆண்டு 86-ம் வயதில் மறைந்தார்.

ஆசிரியர்:வல்லிக்கண்ணன்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%86%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B0%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%B0%E0%AF%8D:%E0%AE%B5%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%A3%E0%AE%A9%E0%AF%8D

வல்லிக்கண்ணன்
(1920–2006)

வல்லிக்கண்ணன் (ரா.சு. கிருஷ்ணசாமி, நவம்பர் 10, 1920 - நவம்பர் 9, 2006) என்பவர் ஒரு தமிழக எழுத்தாளர். இவரது தந்தை ரா.மு. சுப்பிரமணிய பிள்ளை, தாய் மகமாயிஅம்மாள். எழுத்தாளராக வேண்டும் என்பதற்காகவே அரசுப் பணியிலிருந்து விலகியவர். அரசுப் பணியிலிருந்து விலகிய பின்னர் தொடக்கத்தில் இதழ்களில் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார். பின்னர் சிறுகதை, நாவல், குறுநாவல், கட்டுரை என ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கிறார். இவருடைய சிறுகதைகளில் சில ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. இவருடைய பெரிய மனுஷி எனும் சிறுகதை அனைத்து இந்திய மொழிகளிலும் நேரு பால புத்தக வரிசையிலும் வெளிவந்துள்ளது. இவர் எழுதிய “வல்லிக்கண்ணனின் சிறப்புச் சிறுகதைகள்” எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2002 ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் சிறுகதை எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

சிறந்த கதைகள் பதிமூன்று

மொழிபெயர்த்தவர் <::>வல்லிக்கண்ணன்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%9A%E0%AE%BF%E0%AE%B1%E0%AE%A8%E0%AF%8D%E0%AE%A4_%E0%AE%95%E0%AE%A4%E0%AF%88%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D_%E0%AE%AA%E0%AE%A4%E0%AE%BF%E0%AE%AE%E0%AF%82%E0%AE%A9%E0%AF%8D%E0%AE%B1%E0%AF%81

உள்ளடக்கம்

தமிழ் வளர்த்த ஞானியாரடிகள்

https://ta.wikisource.org/wiki/%E0%AE%A4%E0%AE%AE%E0%AE%BF%E0%AE%B4%E0%AF%8D_%E0%AE%B5%E0%AE%B3%E0%AE%B0%E0%AF%8D%E0%AE%A4%E0%AF%8D%E0%AE%A4_%E0%AE%9E%E0%AE%BE%E0%AE%A9%E0%AE%BF%E0%AE%AF%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%9F%E0%AE%BF%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D



உள்ளடக்கம்

பக்கம்

பதிப்புரை

ஞானியாரடிகள் பற்றி புரிதல் தோன்றியது முதல் அவரைப் பற்றிய வரலாறுகளையும், அவர் எழுதிய புத்தகங்கள் எவை என்றும் ஆராய முற்பட்டேன். திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்தின் நினைவில் வாழும் ஏழாம் குருநாதர், ஐந்தாம் பட்டத்து ஞானியாரடிகளின் நாற்றாண்டு நினைவு மலரை சுமார் இருபது ஆண்டுகளுக்கு முன்பு என்னிடம் தந்தார். மேலும் அடிக்கடி மடத்திற்கு செல்லும் வாய்ப்பும் எனக்கு ஏற்பட்டது. ஞானியாரடிகளின் குருபூசைச் சொற் பொழிவுகளில் நானும் கலந்து கொள்வதுடன் தீபம், நா. பார்த்தசாரதியையும் கலந்துக் கொண்டு சொற்பொழிவு ஆற்ற ஏற்பாடு செய்தேன். நா. பா. அவர்கள் ஞானியாரடிகளின் நினைவு மலரை படித்துவிட்டு சுமார் இரண்டு மணி நேரம் ஆழமான கருத்துக்களை தெளிவான நடையில் சொற்பொழிவு ஆற்றிய நிகழ்ச்சி என் மனதில் மேலும் தேடலை உருவாக்கியது.

நா.பா. அவர்கள் சிறிய வயதிலேயே, அதாவது 18வது வயதுக்குள், மதுரை தமிழ் சங்கம் நடத்திய பண்டிதர் தேர்வில் முதல் மாணவராக தேர்ச்சிப் பெற்றவர். ஞானியாரடிகள் நடத்திய தமிழ் கல்லூரியில் பாலபாடம், நிகண்டு, நன்னூல், தொல்காப்பியம் போன்ற நூல்கள் முதலில் கற்பிக்கும் பணியை அவர் வெகுவாக பாராட்டி புகழ்ந்தார். நாற்றாண்டு மலரில் பாடல் பரிகப் பகுதியில் வரும் ஒரு வெண்பாவை நா. பா. ரசித்து விளக்கினார்.

ஞானியாரடிகள் சிதம்பரம் மு. சுவாமிநாத ஐயரவர்களிடம் தமிழ் நாற்களைக் கற்று வந்தார். ஆசிரியர் நாள் தோறும் குறிப்பிட்ட வேளையில் மடாலயத்திற்கு வந்து கல்வி கற்பித்தார். யாப்பிலக்கணம் கற்பித்த காலத்தில், ஆசிரியர் ஓர் வெண்பா எழுதி அதற்கு வாய்பாடு, சீர், தளை முதலியவெல்லாம் எழுதித் தயாராக வைத்திருக்கும்படி சொல்வார். அடுத்த நாள் அதை அவரிடம் காட்ட வேண்டும். அந்த வழக்கப்படி ஆசிரியர் ஒருநாள் ஓர் வெண்பாவை எழுதி வைத்து விட்டுச் சென்றார்.

“நற்பாடலிபுரத்துநாதனேநாயினேன்
பொற்பாம் நினதடியைப் போற்றினேன்- தற்போது
வேண்டுஞ் செலவிற்கு வெண்பொற்காக பத்து
ஈண்டு தருக இசைந்து”

என்பது அவர் புனைந்து எழுதி வைத்துவிட்டுச் சென்ற வெண்பா ஆகும்.

அடுத்த நாள் ஆசிரியர் வழக்கம் போல வந்து நோட்டைப் பிரித்துப் பார்த்தார். அவர் பாட்டெழுதியிருந்த பக்கத்தின் அடையாளம் போல, பத்து ரூபாய் நோட்டு ஒன்றை அடிகள் வைத்திருந்ததைக் கண்டார். உடனே ஞானியாரடிகளைப் பார்த்து ‘நான்பாட்டுக்கு (என் மனம் போனபடி) எழுதி வைத்தேன். உண்மையில் பணம் பெற வேண்டும் என்று இப்பாடலை எழுதிவைக்க வில்லை என்று ஆசிரியர் கூறினார்.

அதற்கு அடிகள் நான் பாட்டுக்குத் தான் (பாடலுக்குத் தான்) பொருள் கொடுத்தேனேயல்லாமல் வேறொன்றிற்காகவுமல்ல என்று சிலேடையாகப் பொருள் வரும்படி சொன்னார்.

இந்த சிலேடை நயத்தை வியந்து நா.பா. பாடலின் பொருளைக் கூறி, இருவர் பேச்சிலும் அமைந்திருந்த சிலேடைப் பொருளை விளக்கிக்

கூறினார். அவருடைய பேச்சு இன்றும் என் செவிகளில் ஒலித்து நா.பா.வின் பேச்சாற்றலை நினைவுபடுத்துகிறது.

தீபம் நா.பா. அவர்கள் 1987ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 13ம் நாள் மறைந்தார். அவர் ஆற்றிய தற்கால இலக்கிய பணியை நினைவு கூரும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அவரது நினைவு நாளில் கடந்த 15 ஆண்டுகளாக ஞானியாரடிகள் தமிழ் மன்றத்தின் வாயிலாக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்து நடத்தி வருகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன் ஞானியாரடிகள் பற்றி ஓர் வாரப் பத்திரிகையில், ஞானியாரடிகள் பிறந்த குலத்தைப் பற்றி ஓர் தவறான செய்தி வெளிவந்தது. மடம்வெளியிட்ட நூற்றாண்டு மலரிலிருந்து (1973) ஆதாரத்துடன் மறுப்புக் கடிதம் எழுதி அப்பத்திரிகைக்கு அனுப்பினேன். இந்நிகழ்ச்சி ஞானியாரடிகள் பற்றி ஓர் ஆய்வு நூல் வெளியிடவேண்டும் என்ற எண்ணத்திற்கு மேலும் வலுசேர்த்தது.

ஞானியாரடிகள் தமிழ்மன்றத்தின் சார்பில் “தீபம் யுகம்” நூல் வெளியீட்டு விழாவில் திரு. ஜெயகாந்தன் ஞானியாரடிகள் பற்றி விரிவாகப் பேசினார். அவரது தாய்மாமா ஞானியாரடிகளிடம் பாடம் படித்தார் என்று செய்தியைக் குறிப்பிட்டார். அவரும் கடலூரில் தனது சிறிய வயதில் ஞானியாரடிகள் பார்த்ததை நினைவு கூர்ந்தார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட “ஞான பீடம்” பரிசு வழங்கும் குழுவின் தலைவராக பணியாற்றிய திரு. கே. ஏ. மணவாளன் அவர்களும், ஞானியாரடிகள் வாழ்க்கை பற்றியும் அவரது தமிழ்ச் சமயப் பணி பற்றியும் மிக ஆழமாகவும், தெளிவாகவும் எடுத்துரைத்தார்.

ஞானியாரடிகள் பற்றி திருஜெயகாந்தன் அவர்களிடம் ஓர் கட்டுரை கேட்டதற்கு ஞானியார் சுவாமிகளை தன்னை விட நன்றாக அறிந்த கே. ஏ. மணவாளன் ஐயாவிடம் வாங்கி கட்டுரைத் தொகுதியில் சேருங்கள், சிறப்பாக இருக்கும் என்று கூறினார். அவரின் விருப்பத்தை ஏற்று, கட்டுரையை மணவாளன் ஐயாவிடம் பெற்று “**தமிழ் வளர்த்த ஞானியாரடிகள்**” புத்தகத்தில் இணைத்துள்ளேன்.

ஞானியாரடிகள் மடத்திற்குச் சென்று புகைப்படங்கள் எடுத்ததோடு, மடத்தின் குருமூர்த்திகளின் சமாதி தோட்டத்திற்கு சென்று ஞானியாரடிகள் நினைவிடத்தையும் நிழற்படம் எடுத்து இப்புத்தகத்தில் இணைத்துள்ளேன். சுவாமிகள் தமிழ் மொழிக்கு ஆற்றிய பணியைப் பற்றி விரிவாக பல தமிழ்

அறிஞர்கள் எழுதியுள்ளனர். பல புத்தகங்களில் ஞானியாரடிகள் பற்றி வெளிவந்த கட்டுரைகளை இப்புத்தகத்தில் இடம் பெறச் செய்துள்ளேன். இந்நூலை சிறப்பாக கொண்டுவர ஏதுவான புத்தகப்பட்டியலை நன்றியுடன் தனியாக இந்நூலில் இணைத்துள்ளேன். தமிழ் சமுதாயத்திற்கு கடந்த நூற்றாண்டில் ஞானியாரடிகள் ஆற்றிய தமிழ்ப்பணியும், சைவப் பணியும் இன்று வரை ஆலமரம்போல் தழைத்து வேருன்றியுள்ளன என்பதை இப்புத்தகத்தில் உள்ளசெய்திகள் நன்கு புலப்படுத்தும். தமிழ் மொழியானது தற்காலக் கணினியையும், தன் வயப்படுத்தி வேகமாக வளர்கிறது என்பது கண்கூடு. மூன்று சங்கங்களைக் கண்ட தமிழ் மொழி இன்று கணினியிலும் நான்காவது சங்கமாக வளர்கிறது.

“தமிழ் வளர்த்த ஞானியாரடிகள்” எனும் இக்கட்டுரைத் தொகுதியை தயாரிக்கும் நேரத்தில் “முதல் குடி அரசு சில பிரச்சினைகள் விமர்சனங்கள்" என்ற நூல் எனது நண்பர் மூலம் கிடைத்தது.

இப்புத்தகம் முருகு இராசாங்கம் எம்.ஏ. அவர்ளால் எழுதப்பட்டுள்ளது. கும்பகோணத்திலுள்ள, செங்குயில் பதிப்பகம் அதை 1988ல் வெளியிட்டிருக்கிறது. முதல் ‘குடி அரசு’ இதழை ஞானியாரடிகள் வெளியிட்டுப் பேசிய பேச்சுப்பற்றியும், அதற்கு தந்தை பெரியார் ஆற்றிய பதில் உரையும் இதில் இடம் பெற்றுள்ளனர். இவ்வுரைகள்தான் இப்புத்தகத்தின் பின் பக்க அட்டையில் பதிவு செய்யப்பட்டுள்ளன. “குடி அரசு” முதல் இதழுக்காக ஓர் ஆய்வு நூல் எழுதி வெளியிடப்பட்டிருக்கிறது. அது இராசாங்கம் அவர்களின் விமர்சன ஆற்றலை நன்கு வெளிப்படுத்துகிறது. தமிழில் விமர்சனக் கலை வளர்ச்சியின் ஆழத்திற்கு சான்றாகத் திகழ்கின்ற க. நா. சு., தி. க. சிவசங்கரன் போன்றவர்களுடன் முருகு இராசாங்கத்தையும் இணைத்துக்கொள்ளலாம். தமிழ் மொழி வளர்ச்சிக்கு இலக்கியம் படித்தபிறகு இலக்கணம் படிப்பதா அல்லது இலக்கணம் படித்த பிறகு இலக்கியம் படிப்பதா என்பது மொழி நூல் அறிஞர்களின் விமர்சனத்திற்கு இன்றும் ஆட்பட்டு வருகின்றது. மொழிப்புலமை வேண்டுமானால் சொல்லாட்சி திறன் வேண்டும். நடைமுறையில் சென்ற நூற்றாண்டிலும் இந்த நூற்றாண்டிலும் வாழும், வாழ்ந்த தமிழ்ச் சான்றோர்களின் எண்ணிக்கை வளர்ந்து கொண்டே வருகிறது. இது மேலும் வளர வேண்டும். இக்கட்டுரைத் தொகுப்பானது தமிழ் மொழி வளர்ச்சிக்கு வகை செய்ய மீண்டும் ஓர் ஞானியாரடிகள் போன்ற தமிழ் நாற்றங்காலுக்கு உரமாக அமைய வேண்டும் என்பதே எல்லோரது விருப்பமாகும்.

இந்நாலின் முகப்பு ஓவியத்தையும், பின்பக்க அட்டை ஓவியத்தையும் அமைத்திட இனாமாக உழைப்பை நல்கிய பெயர் வெளியிட வேண்டாம் என்று கேட்டுக்கொண்ட, இனிய நண்பருக்கு என் நன்றி உரியது. கட்டுரைகளைப் பெற்றுமுறைப்படுத்தி செம்மைப் படுத்தி பதிப்பித்த மூத்த தமிழ்அறிஞர் வல்லிக்கண்ணன் ஐயாவுக்கும் சிவத்திரு ஞானியாரடிகள் வரலாற்று நூலை இக்கட்டுரைத் தொகுப்பில் இணைத்துக் கொள்வதற்கு இசைவை வழங்கிய திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் மடாலயத்தின் எட்டாம் குருநாதராக அருளாட்சி செய்யும் அடிகளுக்கும், ஒளி அச்சுக்கோப்பு செய்த சுகன் கம்ப்யூட்டர் சிஸ்ட்டத்தார்க்கும், நூலை தயாரித்து அளித்த ராஜ் எண்டர்பிரைசஸ் நிறுவனத்திற்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அ. நா. பாலகிருஷ்ணன்
சென்னை-2.

சிறுகதைகள்

கதையாசிரியர்: வல்லிக்கண்ணன்

161 கதைகள் கிடைத்துள்ளன.

https://www.sirukathaigal.com/tag/%E0%AE%B5%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%A3%E0%AE%A9%E0%AF%8D/

தமிழில் சிறுகதை உருவாக்கத்தின் போக்குகள் - பரிமாணங்கள்...

https://www.keetru.com/index.php/2009-11-06-11-47-46/karunchattai-april-2026/20498-2012-07-17-18-16-55

தமிழ்ப்புனைகதை உருவாக்க மரபு குறித்த விரிவான விவரணங் களுடன் கூடிய பதிவு தமிழில் முழுமையாகச் செய்யவில்லை. இம்மரபு குறித்த விவரணத்தேடல் என்பது மிகுதியான உழைப்பை வேண்டி நிற்பது. தனிமனிதர்கள் செய்ய இயலாத பணி. குறிப்பிட்ட திட்ட அடிப்படையில் இணைந்து செயல்படும் குழுவின் மூலமே சாத்தியப்படும் பணிகளில் இதுவும் ஒன்று. தமிழ்ச்சூழலில் தனிப் பட்ட மனிதர்களே தங்களது புரிதல்

சார்ந்து ஆங்காங்கே பதிவு செய்கிறார்கள். இதனால் தமிழ்ப் புனைகதை மரபு சார்ந்த வரலாற்றை முழுமையாக அறியும் வாய்ப்பு இல்லை. புனைகதை மரபில் புதினம் பற்றிய குறிப்புகளைத் திரட்டுவது சாத்தியம். அவை முழுநூல் வடிவில் கிடைப்பதால், தகவல்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு உண்டு; சிறுகதைகளைப் பற்றிய விவரணங்களை அறிவது எளிதான பணியன்று; மேலும் எண்ணிக்கை அளவில் மிக அதிகமாக இருப்ப தால், திரட்டுதல், வாசித்தல், மதிப்பிடல் என்பது மிகவிரிவான வேலையாக அமைகிறது. அண்மைக்காலங்களில் தனிப்பட்ட மனிதர்களின் சிறுகதைகள் முழுத்தொகுதிகளாக அச்சிடப்படு கின்றன. இதன்மூலம், அத்துறை தொடர்பாக வருங்காலத்தில் விரிவாகப் பதிவு செய்ய வாய்ப்புண்டு.

இவ்வகையான முழுத்தொகுப்பு இல்லாத சூழலில், பெ.கோ.சுந்தரராஜன் (சிட்டி) சோ.சிவபாதசுந்தரம் ஆகியோர் இணைந்து எழுதிய 'தமிழில்சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும்' என்னும் நூல், பத்திரிகைகளைச் சார்ந்தே எழுதப்பட்டிருப்பதைக் காண்கிறோம். வெகுசன வாசிப்பு சார்ந்து, இதழியல் தேவைக்கென எழுதப்பட்ட 'இதழியல் புனைவுகள்' குறித்தும் மேற்குறித்த நூல் விரிவாகப் பதிவு செய்திருக்கிறது. குறிப்பிட்ட ஆக்கம் குறித்த மதிப்பீடு என்பது இதழ்களில் இடம்பெறுதல் என்ற அடிப்படை யில்தான் அந்நூல் பதிவுகள் உள்ளன. அச்சுப்பண்பாடு சார்ந்து வாசிப்புப் பழக்கத்திற்கென உருவாக்கப்பட்டவைகளை, ஆக்கங்கள் என்று கருதும் போக்கு அந்நூலில் மிகுதியாக இடம்பெற்றிருப்பதைக் காண்கிறோம். புதுமைப்பித்தனின் தழுவல் கதைகள் குறித்த அக்கறை அந்நூலில் மிகுந்த சிரத்தையுடன் விவாதிக்கப்பட் டிருப்பதை மேற்குறித்தக் கண்ணோட்டத்தில் புரிந்து கொள்ள வேண்டும். புதுமைப்பித்தனின் இதழியல் செயல்பாடு வேறு; அவரது ஆக்கங்கள் வேறு. இரண்டையும் வேறுபடுத்தும் புரிதல் இந்நூலில் இடம்பெறவில்லை. இருந்தாலும் தமிழ்ச்சிறுகதை தொடர்பான விரிவான பதிவுக்கு அந்நூலைவிட்டால், வேறுநூல் தமிழில் இல்லை. விரிவாகப் பதிவுசெய்யும் தேவை நம்முன் உள்ளது.

தமிழ்ப்புனைகதை உருவாக்கம் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலங்களில் தொடங்கியது.காப்பிய மரபு சார்ந்த சிந்தனை மரபில்

புதினங்கள் உருவாக்கப்பட்டன. அவை ஓரளவிற்கு அந்த காலச்சூழலோடு, தமிழின் புதினங்களாக உருப்பெற்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழில் புதினம் உருவாகிவிட்டது. ஆனால் சிறுகதை என்னும் வடிவம், அடிப்படையில், இதழியல் தேவையால் உருப்பெற்றது என்று கூறமுடியும். ஐரோப்பியச் சூழலில் அப்படித்தான் அது உருவானது. இதழியல் என்பது, பக்க அளவு, வாசிப்பு மரபு ஆகிய கட்டுப்பாடுகளை உள்வாங்கும் தன்மையுடையது. பத்தொன்பதாம் நூற்றாண்டில், தமிழில் தமிழ் இதழியல் கால்கொள்ளத் தொடங்கியது. முழுவளர்ச்சி பெறும் வாய்ப்பு இல்லை. சமயப் பரப்பல் சார்ந்த செயல்பாடுகளே அன்றைய இதழியலின் முதன்மையான தேவையாக இருந்தது. வாசிப்புப் பழக்கம் நோக்கிய உருவாக்கமாக இதழியல் அமையும் வாய்ப்பு அன்றில்லை. எழுத்துப் பயிற்சி மிகமிகக் குறைவாக இருந்த காலமும் அது. எழுத்துப் பயிற்சி இல்லாமல் வாசிப்பு மரபு எவ்வாறு உருப்பெறும்?

ஆனால், சமயப் பரப்புதலுக்கு உதவும் வகையில் குட்டிக் கதைகளை அச்சிடும் மரபு உருவானது. கிறித்துவ சமய இதழ்களில் இப்பண்பு வெளிப்பட்டது. கால வளர்ச்சியில், ஐரோப்பிய மற்றும் கீழைத்தேய கதைகள் மொழியாக்கம் செய்யப் பட்டோ, தழுவலாகவோ வெளிவரும் வாய்ப்புகள் உருவாயின. ஈசாப்பின் நீதிக்கதைகள் (1853), முப்பத்திரண்டு பதுமை கதைகள் (1869), தமிழறியும் பெருமாள் கதை (1869), ச.ம.நடேச சாஸ்திரி தொகுத்த திராவிட பூர்வக் கதைகள் (1886) போன்ற தொகுப்புகளைக் கூற முடியும் (விரிவுக்குப் பார்க்க: சிட்டி - சிவபாத சுந்தரம் நூல்) இவற்றை வெறும் கதை மரபுகளாகக் கருதலாம். இவை சிறுகதைகள் அன்று. இவ்வடிவத்திலிருந்து தான் சிறுகதை உருவானது என்று கருதும் மரபும் சரியெனக் கூறமுடியாது. நவீனச் சிந்தனை மரபும் இதழியல் கட்டமைத்த வடிவமும் சிறுகதை எனும் மரபு உருவாகக் காரணமாக அமையும். வெறும் கதை சொல்லல், நகைச்சுவைக் கதை சொல்லல், சோதனைக்கதை சொல்லல் ஆகியவை சிறுகதை மரபுக்கு மூலமாக அமைய முடியாது.

சிறுகதை உருவாக்க வரலாறு குறித்து எழுதுவோர், கதை சொல்லல், சிறிய கதைசொல்லல் ஆகிய வடிவத்திலிருந்து சிறுகதை வடிவத்தைப்

புரிந்துகொள்ள முயலுகிறார்கள். இதனால்தான் ‘சங்க காலத்துச் சிறுகதைகள்’ (மு.அருணாசலம்) எனும் நூற்பெயரும் உருவாகிவிட்டது. இம்மரபை முற்றிலும் மறுபரிசீலனை செய்யும் தேவை இருப்பதாகக் கருதுகிறேன். தமிழ்ச்சூழலில் சிறுகதை வடிவத்தைக் கண்டெடுத்தவரும் அதனை இதழியல் மரபு சார்ந்து நிலைபேறு கொள்ளச் செய்தவரும் புதுமைப்பித்தன் தான். அதற்கு முன் தமிழில் எழுதப்பட்ட சிறுகதைகளாகக் கூறப்படுபவை அனைத் தும் சமயமரபு சார்ந்த - நாட்டார் மரபு சார்ந்த போதனைக் கூறுகளைக் கொண்ட கதைத்தன்மைகளை உள்வாங்கியவை. நவீன மரபை அவை உள்வாங்கவில்லை. நவீன சிந்தனை மரபிற்குள் இருந்து இவ்வடிவத்தை அவர்கள் புரிந்து கொண்டதாகக் கூறமுடியாது.

பாரதியும் வ.வே.சு.அய்யரும் அ.மாதவையாவும் எழுதிய கதைகளை மேற்குறித்தப் பின்புலத்தில் புரிந்து கொள்வது நல்லது. நவீனச் சிந்தனை மரபுக்கும் நவீன வடிவ உருவாக்க மரபிற்கும் தொடர் புண்டு. புதுக்கவிதை உருவாக்க மரபை இத்துடன் இணைத்துப் பார்க்கலாம். புதுமைப்பித்தன் காலத்தில்தான் தமிழில் சிறுகதை உருவாக முடியும். புதுமைப்பித்தன் உருவாக்கினார். தொடக்கமே மிக வீரியமிக்கதாக அமைந்திருப்பதைக் காண்கிறோம். புதுமைப் பித்தன் ‘மணிக்கொடி’யில் எழுதிய கதைகளின் வளர்ச்சிப் பரிமாணத் தையும் உணரமுடியும். பி.எஸ்.இராமையா நடத்திய ‘சிறுகதை மணிக்கொடி’யில் தான் அவரது உச்ச வளர்ச்சிப் பரிமாணத்தை முழுமையாக அறியலாம். ‘துன்பக் கேணி’ கதையை வாசிப்பவர்கள் இதனை உணரமுடியும். இந்தப் பின்புலத்தில், தமிழ்ச் சிறுகதை உருவாக்க மரபுகளை, ஆளுமைகளை முதன்மைப்படுத்தி பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

- ***புதுமைப்பித்தன் ஆளுமை மரபு***
- ***ஜி.நாகராஜன் ஆளுமை மரபு***
- ***பூமணி உள்ளிட்ட பலர் ஆளுமை மரபு***
- ***கோணங்கி சார்ந்த ஆளுமை மரபு***

இந்த வகையான புரிதல் என்பது, தமிழ்ச் சிறுகதை உருவாக்க மரபில் புதிய தடம் நோக்கிப் பயணப்பட்டவர்கள் என்று கருதலாம். வடிவச் சோதனையாளர்களாகச் செயல்பட்டவர்களை முதன்மைப் படுத்திப்

பார்க்கும் மரபு தமிழில் உண்டு. மௌனி, லா.ச.ரா., நகுலன், பிரமிள் ஆகியோர் இப்பின்புலத்தில் கவனத்தில் கொள்ள வேண்டிய வர்களே. வடிவத்திற்குள் செயல்படும் கருத்துநிலை சார்ந்தே, ஆளுமைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.

புதுமைப்பித்தன் மற்றும் ஜி.நாகராஜன் ஆளுமைகள் செயல்பட்ட காலங்களில் தமிழ்ச்சிறுகதை மரபின் பதிவு செய்ய வேண்டிய ஆளுமைகளாகப் பின்கண்டவர் களைப் பட்டியல் இடலாம்.

புதுமைப்பித்தன், கு.ப.ராஜகோபாலன், கு.அழகிரிசாமி, கி.ராஜநாராயணன், சுந்தரராமசாமி, ஜெயகாந்தன், விந்தன், ரகுநாதன், வல்லிக்கண்ணன், சண்முகசுந்தரம் என்றொரு பிரிவை இனம்காண முடியும். ந.பிச்சமூர்த்தி, மௌனி, லா.ச.ரா., க.நா.சு., சி.சு.செல்லப்பா, சிதம்பர சுப்பிரமணியன், ரஸிகன், தி.ஜானகிராமன், கா.சி.வேங்கடரமணி, , கரிச்சான்குஞ்சு என்ற பிரிவைப் புரிந்து கொள்ளலாம். இவர்கள் 1930 தொடக்கம் 1965 வரை எழுத்துலகில் செயல்பட்டவர்கள்.

இந்த மரபின் தொடர்ச்சியாகவே ஜி.நாகராசன், அம்பை, நீல.பத்மனாபன், பூமணி, கிருஷ்ணன் நம்பி, வண்ணநிலவன், பா.செயப்பிரகாசம், வண்ணதாசன், பிரபஞ்சன், சி.ஆர். இரவீந்திரன், வீர.வேலுசாமி, என்.ஆர். தாசன், ஜெயந்தன், பிரபஞ்சன், மேலாண்மை பொன்னுசாமி, கந்தர்வன் என்றொரு பிரிவைக் காணலாம். பிரமிள், நகுலன், ந.முத்துசாமி, சார்வாகன், அசோகமித்திரன், மா.அரங்கநாதன், இராசேந்திரசோழன் (அஸ்வகோஷ்), சா.கந்தசாமி, ஆ.மாதவன், ஆதவன், சூடாமணி, நாஞ்சில் நாடன் என்றும் பட்டியல் இட வேண்டும்.

மேற்குறித்த 1965 - 1980 இடைப்பட்ட ஆளுமைகளிலிருந்து முற்றிலும் பல்வேறு வகையில் செயல்படும் ஆளுமைகள் 1980களில் தொடங்கி இன்றும் செயல்படுகின்றனர். இவ்வகைப் போக்கின் வேகம் தொண்ணூறுகளில் வீரியம் கொண்டது. அது பெண்ணிய எழுத்து, ஒடுக்கப்பட்ட தலித் எழுத்து, சிறுபான்மை மக்களான இஸ்லாமிய எழுத்து, ஆகியபண்புகளை முதன்மைப்படுத்தி பல்வேறு பரிமாணங் களை உள்ளடக்கிய, குறிப்பாக வடிவம் சார்ந்த பிரக்ஞையோடு உருவான

எழுத்துகள் எனக் கடந்த முப்பது ஆண்டுகளை மதிப்பிட முடிகிறது. இதில் சுமார் 90 ஆளுமைகளின் பட்டியல் கிடைக்கிறது. புதுமைப்பித்தன் காலத்தில் சுமார் இருபது ஆளுமைகள் என்றால், அதன் அடுத்த கட்டத்தில் சுமார் 30 ஆளுமைகளை பட்டியல் இடலாம். இவ்வெண்ணிக்கை மூன்று மடங்காகியிருப்பதைக் காண்கிறோம். (இந்த ஆளுமைகளின் அகரவரிசைப் பட்டியல் இவ்விதழின் இறுதியில் ஆவணம் ஒன்றில் இணைக்கப்பட்டுள்ளது.) இந்தக் கட்டம் தொடர்பான பதிவுகளை இச்சிறப்பிதழில் பதிவு செய்துள்ளோம்.

தமிழ்ச்சிறுகதை உருவாக்க மரபின் மூன்று கட்டங்களாக 1930 - 1965, 1966 - 1980, 1981 - 2010 ஆகிய காலப்பிரிவைக் கூறலாம். இதழியல் வளர்ச்சி, இயக்கம் சார் கருத்துரிமைகள், வாசிப்போர் பெருக்கம், புனைகதை மரபு நமது அன்றாட செயல்பாட்டின் பிரிக்க இயலாத ஒன்றாக உருப்பெற்றுள்ள சூழல் எனப் பல்வேறு புரிதல்களை உள்வாங்கியே மேற்குறித்த பாகுபாட்டை வசதி கருதி செய்துள்ளோம்.

ஒரு வகையில் க.நா.சு.வின் பட்டியல் மரபின் இன்றையப் புரிதல் சார்ந்த பட்டியல் மரபாக இதனைக் கொள்ளலாம். க.நா.சு.வைப் பட்டியல்காரர் என்று சொன்னாலும் அவர் தான் நமது புனைகதை மரபைக் கவனத்தில் கொண்டு மதிப்பீடு செய்வதில் கவனம் செலுத்தியவராக இருந்தார். அவ்வகைச் செயல்பாடும் நமக்குத் தேவைப்படுகிறது. க.நா.சு. நூற்றாண்டில் அவரது அந்தப் பணியை நினைவு கூறும் தேவையுண்டு.

இவ்வகையில் தமிழில் சிறுகதை உருவான இறுதிக் காலகட்டம் குறித்த உரையாடலாக அமைந்துள்ள இவ்விதழ் முற்காலங்களின் தொடர்ச்சியே. அதனைப் புரிந்து கொள்ளும் போக்கில் மேற்குறித்தச் செய்திகளின் பதிவைப் புரிந்துகொள்ள வேண்டுகிறேன்.

தமிழ்ச்சிறுகதை மரபின் மூன்று கட்டங்கள் என்ற மேற்கண்ட குறிப்பைப் புரிந்துகொள்ளக் கீழ்க்காணும் பல்வேறு பரிமாணங் களைக் கவனத்தில் கொள்வது அவசியம்.

- ஐரோப்பியப் புத்தொளி மரபை உள்வாங்கி, நமது மரபுக்கான புதிய வடிவத்தைக் கண்டறிந்த சூழல் உருப்பெற்றது. ஐரோப்பிய மரபுகள் என்பது அறிதலாக அமைந்தது. அதுவே நமது மரபாக வடிவம்

பெறவில்லை. இதற்கு முந்தைய காலச் சூழலில் ஐரோப்பிய மரபை அப்படியே உள்வாங்கும் செயல்பாடுகள் நடைமுறையில் இருந்தன; அல்லது நமது வைதீக மரபின் புராணியம் சார்ந்த கதைசொல்லல் மரபு வெளிப்பட்டது. இம்மரபுகளைப் புறந்தள்ளி நமக்கான மரபைப் புதுமைப்பித்தன் கண்டெடுத்தார். தமிழ்ச்சிறுகதைப் புனைவின் தொடக்கம் நிலைபேறு கொண்டது.

- மேற்குறித்த மரபை வளர்த்தெடுக்கும் வகையில் சங்கிலித் தொடர் மரபில் இதழியலும் உருவானது. ஒரே முதலாளி பல இதழ்களை நடத்தினார். 'செய்தி' என்பதைப் பெறுவதற்கான அறிவியல் கருவிகளும் புழக்கத்திற்கு வந்தன. ஆங்கில மொழிசார்ந்த வாசிப்போடு, வட்டார மொழிசார்ந்த வாசிப்பை முன்னெடுக்கும் சூழல் உருவானது.

- எழுத்துப் பயிற்சி மிக விரிவாக வளர்ச்சி பெற்றது. வாசிப்போர் எனும் பிரிவு உருவாகியது. புத்தகம் சேர்க்கும் மரபும் நூலக உருவாக்கமும் நடைமுறைக்கு வந்தன.

- பல்வேறு சமூக இயக்கங்கள் உருவாயின. கருத்துநிலைகள் சார்ந்த உரையாடல்கள் உருவாயின. இடதுசாரி இயக்கம், தேசிய இயக்கம், திராவிட இயக்கம் எனும் செயல்பாடுகள் பொதுவெளியில் வாசிப்பு மரபின் வீரியத்தை வளர்த் தெடுத்தன.

- குறிப்பிட்ட கருத்துநிலை சார்ந்த ஆக்கங்கள் உருவாயின. இடதுசாரி சார்பு எழுத்தாளர், காந்திய எழுத்தாளர், வெகுசன வாசிப்பு சார்ந்த எழுத்துக்காரர் என்ற புரிதல்கள் உருவாயின.

- இரண்டாம் உலகப்போர் சூழல், தமிழில் பதிப்பகங்கள் உருவாக வழிகண்டன. பதிப்பகங்கள் இதழ்களையும் நடத் தின. எழுத்து என்னும் ஆளுமை புரிந்து கொள்ளப்பட்டது.

- மேற்குறித்தத் தன்மைகள் தமிழ்ப்புனைவின் வளத்திற்கும் வளர்ச்சிக்கும் மூலமாக அமைந்தன. புதுமைப்பித்தன் தொடங்கி அழகிரிசாமி வழியாக கி.ராஜநாராயணன், ஜெயகாந்தன் எனும் தொடர்ச்சி

உருவானது. ந.பிச்சமூர்த்தி தொடங்கி க.நா.சு., லா.ச.ரா, தி. ஜானகிராமன் என்ற மரபும் வலுப்பட்டது.

1930 - 1965 என்ற காலகட்டத்தின் போக்குகளாக மேற்கண்ட வர்களை இனம் காணமுடிகிறது. இதற்கு முந்தைய காலச் சூழலில் இவ்வகையான போக்குகளைக் காண முடியாது.

1965-1980 என்ற காலகட்டத்தின் பல்வேறு பரிமாணங்களைப் பின்வரும் வகையில் தொகுத்துக் கொள்ள முடியும்.

- அரசியல் கருத்துநிலைகள் சார்ந்த இளைஞர்கள் தமிழகக் கிராமப்புறங்களில் உருவானார்கள். எழுத்துப் பயிற்சி என்பது மிகப்பரவலானது. எண்ணிக்கையும் இரண்டு மடங்காகியது. கிராமங்களில் வாசிப்புப் பழக்கம் பரவலானது.

- முதல் கட்டத்தில் ஆங்கில மொழிவழிப் பயிற்சி பெற்றவர் களே ஆக்கங்களைச் செய்தனர். இந்தக் காலச்சூழலில் ஆங்கில மொழியறியாத படைப்பாளிகள் உருவாயினர். புதுமைப்பித்தன் மரபைச் சார்ந்து வந்த படைப்பாளிகளில் ஆங்கில வாசிப்பு மரபு மிக்கவர்களே அதிகம். இக்காலச் சூழலில், ஆங்கில வாசிப்பு மரபு உடையவர்கள் மிகக் குறைவு. இதனால், தமிழ்மண்ணின் வீரியம் ஆக்கங்களாக வடிவம் பெற முடிந்தது.

- அமெரிக்க எழுத்து மரபு, சோவியத் மற்றும் சீன எழுத்து மரபு என்பது 1940கள் தொடங்கித் தமிழில் செயல்பட்டது. 1950களில் அத்தன்மைகளின் செல்வாக்கு மிகுதி. ஆனால், இத்தன்மையின்றி, இடதுசாரி கருத்துநிலை; அதன் எதிர்க் கருத்துநிலை எனும் படைப்பாளிகள் இக்காலத்தில் தமிழ்ப் புனைவுலகில் உருவாயினர்.

- தாமரை இதழ்வழி (குறிப்பாகத் தி.க.சி.) இக்காலச் சூழலில் சிறுகதைப் படைப்பாளிகள் பலர் உருவாக வழி ஏற்பட்டது. இடதுசாரி கருத்துநிலை என்பது தமிழ் ஆக்கங்களில் இயல் பாகச் செயல்படும் சூழல் உருவானது. தமிழ்க்கிராமங்கள், புதிய கண்ணோட்டத்தில் புனைவுகளில்

இடம்பெறத் தொடங்கின. (தமிழ்ச்சினிமாவிலும் இத்தன்மை இக்காலத்தில் உருவானது.)

- தமிழில் சிறுபத்திரிகை மரபு என்பது வலுவாக உருவானது. 1959இல் 'எழுத்து' முதல் அதன் வீரியம் பல்பரிமாணங்களில் செயல்பட்டது. தமிழ்ப்புனைவு சார்ந்த விரிவான உரையாட லுக்குச் சிறுபத்திரிகைகள் களம் அமைத்தன. (விரிவுக்குப் பார்க்க: வீ.அரசு, தமிழ்ச்சிறுபத்திரிகை அரசியல் : 2003) தமிழ்ச்சிறுகதைகள் புதிய பரிமாணத்தில் உருப்பெற இக்காலச் சூழலின் சிறுபத்திரிகைகள் பங்களிப்பு குறிப்பிடத்தக்கது. இம்மரபு 1990கள் வரை தொடர்ந்தது. 1995 களுக்குப் பின் அது வேறு திசைக்குச்சென்றது.

- நக்சல்பாரி இயக்கம், அவசர நிலைச்சட்டம் ஆகிய பிற நிகழ்வுகள் படைப்பாளிகளிடத்தில் உருவாக்கிய தாக்கங்கள், புனைவிலும் வெளிப்பட்டதைக் காண்கிறோம்.

தமிழ்ச்சிறுகதை மரபின் அண்மைக்கால கட்டம் (1980-2010) பல்வேறு புதிய பரிமாணங்களை உள்வாங்கியதாகக் கருத லாம். அத்தன்மைகளைப் பின்வரும் வகையில் புரிந்து கொள்ளலாம்.

- 1980களில் உலக அளவில் ஏற்பட்ட அரசியல் நிகழ்வுகள் படைப்பாளிகளிடத்தில் பெரும் தாக்கத்தை உருவாக்கியது. குறிப்பாகச் சோவியத் தகர்வு புதிய கருத்துநிலைத் தேடலுக்கு அடிப்படையாக அமைந்தது.

- தேசிய இனச்சிக்கல் குறித்தப் புதிய உரையாடல்கள் உருவா யின. இடதுசாரிகள் பெரியாரின் கருத்துநிலைகளைப் புதிய கண்ணோட்டத்தில் அணுகத் தொடங்கினர்.

- பெண்ணியம், தலித்தியம், சிறுபான்மை இயக்கம், பின்நவீனத்துவம் ஆகிய பல்வேறு அணுகுமுறைகள் உருவாயின. இப்பின்புலத்தில் இவ்விதழில் கட்டுரைகளை உருவாக்கி யுள்ளோம். இத்தன்மைகள் புதிய படைப்பு முறைகளை முன்மொழிந்தன. தமிழ்ச்சிறுகதை அத்தன்மைகளுக்கு முகம் கொடுத்தது.

- பெண்ணிய எழுத்து என்பது வலுவான பிரிவாக வடிவம் பெற்றது. எண்ணிக்கையில் கூடுதலான பெண் சிறுகதைப் படைப்பாளிகளும் உருவாயினர்.

- வடிவச் சோதனைகள், பெரிதும் நடைமுறைக்கு வந்தன. இவை தமிழில் புதியவகைச் சிறுகதைகள் உருவாக வழி கண்டன. சிறுகதையின் மொழி மாறியது. புதிய மொழிகள் உருவாயின.

வல்லிக்கண்ணனின் **'வெறும் புகழ்'** என்ற தலைப்பிலான தனிப் பாடல் எதுவும் பரவலாக அறியப்படவில்லை. எனினும், அவரது கவிதைகளில் போலிப் புகழ் மற்றும் ஆடம்பரத்தை விமர்சிக்கும் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன.

புகழ்பெற்ற எழுத்தாளரான வல்லிக்கண்ணன், ந. பிச்சமூர்த்தி மற்றும் க.நா.சு போன்றவர்களுடன் இணைந்து தமிழில் புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்த முன்னோடிகளில் ஒருவர்.

இவரது கவிதைகளின் முக்கிய அம்சங்கள்:

- **சமூக விழிப்புணர்வு:** நாட்டின் நிலை, ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சாமானிய மக்களின் அவலங்களைக் கண்டித்து கவிதைகளை எழுதியுள்ளார்.
- **எளிய நடை:** யாப்பு விதிகளுக்குக் கட்டுப்படாமல், உணர்வுகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வசன கவிதைகளை அதிகளவில் படைத்துள்ளார்.

பிரபல படைப்புகள்:

- **புதுக்குரல்கள்** (கவிதைத் தொகுப்பு)
- **அமரவேதனை** (கவிதைத் தொகுப்பு)
- **புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்** (சாகித்ய அகாடமி விருது பெற்ற ஆய்வு நூல்) [1, 3]

வல்லிக்கண்ணனின் முழுமையான இலக்கியப் பங்களிப்புகள் மற்றும் வரலாற்றைப் பற்றி மேலும் அறிய, தமிழ் விக்கிப்பீடியா பக்கத்தைப் பார்வையிடலாம்.

வல்லிக்கண்ணன் கவிதைகள்

https://aekaanthan.wordpress.com/2020/09/18/%E0%AE%B5%E0%AE%B2%E0%AF%8D%E0%AE%B2%E0%AE%BF%E0%AE%95%E0%AF%8D%E0%AE%95%E0%AE%A3%E0%AF%8D%E0%AE%A3%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%95%E0%AE%B5%E0%AE%BF%E0%AE%A4%E0%AF%88%E0%AE%95%E0%AE%B3%E0%AF%8D/

சுப்ரமணிய பாரதியிலிருந்து, அவருக்குப் பின் வளர்ந்து செழித்த தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றை, ஒரு சிறந்த கட்டுரை நூலாக தமிழ் இலக்கியத்தில் பதித்த ஆளுமை வல்லிக்கண்ணன். நா.பார்த்தசாரதிதான், தான் நடத்திவந்த 'தீபம்' இலக்கிய இதழில் இதனை ஒரு கட்டுரைத் தொடராக 1977-ல் வல்லிக்கண்ணனை எழுதவைத்தார். 1978-ல் சாகித்ய அகாடமி வல்லிக்கண்ணனுக்கு 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்கிற இந்த நூலுக்காக விருது வழங்கி கௌரவித்தது.

2006-ல் மறைந்த வல்லிக்கண்ணன், சிறுகதை, நாடகம், நாவல் என நிறைய எழுதியிருக்கிறார் எனினும் தன் கட்டுரை நூல்கள் சிலவற்றிற்காகக் கவனிக்கப்பட்டவர். பாரதி, ந.பிச்சமூர்த்தி, கு.ப.ராஜகோபாலன் ஆகியோரின் தாக்கத்தில் இளம் வயதிலிருந்தே கவிதைகளை எழுதிவந்தவர். எழுத்தாளர் சி.சு. செல்லப்பாவின் 'எழுத்து' இலக்கிய இதழில் இவரது புதுக்கவிதைகள் வெளிவந்தன. அவரே, 'அமரவேதனை' **என்கிற தலைப்பில் வல்லிக்கண்ணனின் முதல் கவிதை நூலை 1974-ல் 'எழுத்து பிரசுரமாக' வெளியிட்டார். அறுபதுகளின் இறுதி, எழுபதுகளின் ஆரம்பத்தில் எழுதப்பட்ட கவிதைகளைக்கொண்ட 'அமரவேதனை' யை சமீபத்தில் புரட்டியபோது சில, மனம் கவர்ந்தன.**

வாசியுங்கள் அன்பர்களே !

'எழுத்து விவசாயி' வல்லிக்கண்ணன்

https://keetru.com/index.php/2010-06-24-04-31-11/ungalnoola-feb-16/30600-2016-04-06-08-58-01

கவிஞர், சிறுகதையாசிரியர், நாவலாசிரியர், இதழாளர், கட்டுரையாளர், மொழிபெயர்ப்பாளர், திறனாய்வாளர், நாடக ஆசிரியர், இலக்கிய வரலாற்றா சிரியர் எனப் பல பரிமாணங்கள் கொண்ட படைப்பாளி வல்லிக்கண்ணன்.

திருநெல்வேலி மாவட்டம் நான்குநேரி வட்டாரம் திசையன்விளையில், ரா.மு.சுப்பிரமணியம் பிள்ளை, மகமாயி அம்மாள் வாழ்விணையருக்கு 12.11.1920 ஆம் நாள் பிறந்தார். இவருக்கு பெற்றோர் இட்ட பெயர் கிருஷ்ணசுவாமி. இவரது தந்தையார் சுங்கத்துறையில் ஆய்வாளராகப் பணியாற்றினார். தமது பத்து வயதில் தந்தையை இழந்தார். தாயின் அரவணைப்பில் வளர்ந்தார்.

கோவில்பட்டி, பெருங்குளம் முதலிய ஊர்களில் தமது தொடக்கக் கல்வியையும், திருநெல்வேலி மந்திர மூர்த்தி உயர்நிலைப் பள்ளியிலும் பயின்றார். பின்னர், பாளையங்கோட்டை புனித சவேரியார் உயர்நிலைப் பள்ளியில் பள்ளியிறுதி வகுப்புடன் அவரது படிப்பு முடிவடைந்தது.

பரமக்குடியில் வேளாண்மை விரிவாக்கப் பணியாளர் அலுவலகத்தில் இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். பின்னர், திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீ வைகுண்டத்துக்கு பணி மாறுதல் செய்யப்பட்டார்.

அங்கு பணிபுரிந்து கொண்டிருந்த போது வல்லிக்கண்ணனின் எழுத்துப் பணி குறித்து, வேளாண்மை விரிவு அலுவலர் அந்தோணிப் பிள்ளை என்பவர் உயர் அதிகாரிக்குப் புகார் செய்தார். இதனால், தமது அரசுப் பணியினை உதறித் தள்ளிவிட்டு அலுவலகத்தை விட்டு வெளி யேறினார். 1941 ஆம் ஆண்டு முதல் தமது வாழ்க்கையை எழுத்துப் பணிக்கு அர்ப்பணித்தார்.

உலக அளவிலும், இந்திய அளவிலும் புகழ் பெற்றவர்களின் வாழ்க்கையையும், செயல்பாடுகளையும் படித்தார். அவை அவரது சிந்தனையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

`மணிக்கொடி' இதழ்களின் தொகுப்பைப் படித்து, அவ்விதழ்களில் புதுமைப்பித்தன் கதைகளைப் படித்து, அக்கதைகளினால் ஈர்க்கப்பட்டு,

தாமும் அதுபோன்று எழுத வேண்டும் என ஆர்வம் கொண்டு, தமது கதை களை இதழ்களுக்கு அனுப்பினார்.

தமது சொந்த ஊர்ப் பெயரான இராசவல்லிபுரம் என்பதிலுள்ள வல்லி என்ற பெயரையும் இணைத்து வல்லிக்கண்ணன் என்ற பெயரை உருவாக்கினார். இப் பெயர் மூலம் இவரது பிறந்த மண் பற்றையும், தமிழ் மொழிப் பற்றையும் உணர்த்துகிறது.

வல்லிக்கண்ணன் `கிராம ஊழியன்' இதழின் பொறுப்பாசிரியராக 1944 முதல் 1947-ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார். `இளவல்' என்னும் புனைபெயரில் கவிதைகள் எழுதினார். அழகு, திங்கள், அந்திவானம், மழை போன்ற இயற்கைகளை பாடுபொருளாக்கி கவிதைகள் படைத்துள்ளார். இவரது கவிதைகள் அழகுணர்ச்சி மிகுந்தவையாகும். மகாகவி பாரதி யாருக்குப் பின் காட்சிக் கவிதைகள் படைத்து வெற்றி கண்டவர்களுள் வல்லிக்கண்ணன் குறிப்பிடத்தக்கவர்.

"சுதந்திரம் வந்தது
சுகம் தான் வந்ததோ?
உம்மைச் சேர்ந்தோரே
உம் பேர் சொல்லித்
தாம் உயர வகை கண்டனர்!"

என்ற கவிதையின் மூலம் இந்தியா சுதந்திரம் பெற்றாலும், அதனால் பலன் பெறுவதற்கு வழிகண்ட சுயநலவாதி களை அம்பலப்படுத்துகிறார்.

"நீவிர்
அன்று போல் இன்றும்
ஏழையாய் தரித்தரராய்
பட்டினிப் படையினரால்
உண்ண உணவும்
உடுக்க உடையும்
உறையுள் வசதியும்
பெற்றிட இயலாப் பூச்சிகளாய்
உழைத்துச் சலித்து,
வரிகளும் உயர்விலைகளும்
கொடுத்துச் சோர்ந்து
எவர் ஆண்டால் நமக்கென்ன?"

ஏழை மக்கள் வறுமையிலும் பட்டினியிலும் வாழும் அவல நிலைகண்டு குமுறுகிறார். வல்லிக் கண்ணனின் கவிதைகள் நாட்டின்

ஒருமைப்பாட்டைக் காணும் வகையிலும், சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் காட்டுவதாகவும், தொழிலாளர்களின் நலம் நாடு பவைகளாகவும் அமைந்துள்ளது. மேலும் இன்றைய மானுட வாழ்க்கையின் அவல நிலையைக் கண்டு வெதும்பி உள்ளம் குமுறி தமது கவிதைகளைப் படைத் துள்ளார்.

அமர வேதனை, புதுக்குரல்கள் முதலிய கவிதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

கவிஞர் வல்லிக்கண்ணன் காலத்தின் தாக்கத்திற்கு உட்படுபவராகவும் அதே காலத்தின் மீது தமது தாக்கத்தைச் செலுத்துபவராகவும் விளங்குகிறார்.

வல்லிக்கண்ணன் 1950-ஆம் ஆண்டு `விடியுமா?' என்னும் நாடகத்தை எழுதினார். இந்த நாடகம் ஓட்டல் தொழிலாளர்களின் சிக்கல்களையும், சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களையும் சித்திரிக்கிறது.

Òநட்ட கல்லைக் குளிப்பாட்ட வெள்ளிக்குடங் களிலே பாலா? ஆகா நாட்டிலே பட்டினிப் பட்டாளம் பெருத்துக் கிடக்கு, பச்சைக் குழந்தைகள் பாலுக்கு பறவாப் பறக்குது. தினந்தோறும் குடம், குடமாகப் பால் சாக்கடையிலே போய்ச் சேருது, அபிசேகமாம், புண்ணியமாம், இது மாதிரி அநியாயம் வேறு எந்த நாட்டிலேயாவது நடக்கிறதா? இந்த நாடு விடியுமா?" இது அவரது Ôவிடியுமா?Õ என்னும் நாடகத்தில் இடம் பெற்றுள்ள வசனமாகும்.

செவ்வானம், வசந்தம் மலர்ந்தது, வீடும் வெளியும், ஒரு வீட்டின் கதை, அலைமோதும் கடல் ஓரத்தில், இருட்டு ராஜா, நினைவுச்சரம் முதலிய நாவல்களை எழுதி உள்ளார். வல்லிக்கண்ணன் தமது பதினாறு வயதிலேயே கதைகள் எழுத ஆரம்பித்துவிட்டார். அவரது முதல் கதை `சந்திர காந்தக்கல்' பிரசண்ட விகடன் இதழில் வெளிவந்தது. கல்யாணி முதலிய சிறுகதைகள், மத்தாப்புச் சுந்தரி, ராதை சிரித்தாள். ஒய்யாரி, அத்தை மகள், முத்தம், ஆண் சிங்கம், அருமை யான துணை, மனிதர்கள் உள்ளிட்ட 19 சிறுகதைத் தொகுப்புகளை எழுதி வெளியிட்டுள்ளார். கடலில் நடந்தது (மார்க்சிம்

கார்க்கி), டால்ஸ்டாய் கதைகள், மாக்சிம் கார்க்கி கட்டுரைகள் முதலிய மொழிபெயர்ப்பு நூல்களையும் வெளியிட்டுள்ளார்.

இவரது `பெரியமனுஷி' என்னும் சிறுகதை உலகத்துச் சிறுகதைகள் ஆங்கில மொழித் தொகுப் பிற்காக இந்திய மொழிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப் பட்டு, வெளியிடப்பட்டது. மேலும், 'Stories from Asia Today; என்னும் ஆங்கிலத் தொகுப்பில் இக்கதை இடம் பெற்றுள்ளது.

'இன்றைய சமுதாயம் பிளவுண்ட சமுதாயம், ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி என வர்க்கப் பிரிவும், தொழிற் பிரிவும் மக்களை பிளவுபடுத்தி வைத்திருக்கிறது. இது போன்றே மக்கள் அரசியல் வாதிகள் என்ற பிளவும் மக்களிடம் காணப்படுகிறது. மக்கள் வாக்களிப்பவராகவும், அரசியல் வாதிகள் வாக்குகளைப் பெறுபவராகவும் உள்ளனர். மேலும், வாக்களிக்கும் மக்கள் அரசியல் வாதிகளிடமிருந்து எதிர்பார்ப்பவர்களாகவும், எதிர்பார்க்கின்ற மக்களை அரசியல்வாதிகள் வஞ்சிப்பவர்களாகவும் உள்ளனர்", என்ற இன்றைய நடப்பை `வள்ளல்தனம்' என்னும் தமது சிறுகதையில் தெளிவுபடுத்தியுள்ளார்.

சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்களும், அவற்றை நீக்குவதற்கான தீர்வுகளும், அறிவியல், சமுதாயவியல், உளவியல் அடிப்படையில் வல்லிக்கண்ணனின் சிறு கதைகள் உள்ளது என திறனாய்வாளர்கள் கூறியுள்ளனர்.

சமுதாய மாற்றத்தை ஏற்படுத்திட, வாழ்க்கைத் துன்பங்களுக்கான உரிய காரணங்களைக் கண்டறிந்து தீர்வு காண தமது கதைகளில் வலியுறுத்தியுள்ளார்.

பாரதிக்குப்பின் தமிழ் உரை நடை, பாரதிதாசனின் உவமை நயம், எழுத்தாளர்களும் பத்திரிகைகளும், வாசகர்கள் - விமர்சகர்கள், சரஸ்வதி காலம், தமிழ்ப் பத்திரிகைகள் அன்றும் இன்றும், புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் முதலிய அழியாக் கட்டுரை நூல்களை எழுதி அளித்துள்ளார்.

இவரது 'எழுத்தாளர்களும் பத்திரிக்கைகளும்' என்னும் நூலுக்கு தமிழ் வளர்ச்சிக் கழகம் பரிசளித்துப் பாராட்டியது.

'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்னும் இவரது நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.

கோவையில் 1944-ஆம் ஆண்டிலும், சென்னையில் 1946-ஆம் ஆண்டிலும் நடைபெற்ற தமிழ் எழுத்தாளர்கள் மாநாடுகளில் கலந்து கொண்டார். அம்மாநாடுகளில் மகாகவி பாரதியாரின் பாடல்கள் நாட்டுடைமை யாக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தினார். தொடர்ந்து அதற்காகப் பாடுபட்டார்.

திருச்சியில் 1947-ஆம் ஆண்டு நடைபெற்ற சிறு பத்திரிகைகள் மாநாட்டிற்கு வல்லிக்கண்ணன் தலைமை தாங்கி நடத்தினார்.

“இலக்கியத்தின் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும், வளத்துக்கும் கனமாக சிந்தனைகள் பரவுவதற்கும், திறமையான எழுத்தாளர்கள் வளரவும் சிறு பத்திரிகைகள் உதவ முடியும்” என்பதை வலியுறுத்தினார்.

மக்கள் கலாசாரத்தை மண்ணாக்கும் திரைப்படம், மேற்கத்திய கலாசார சீரழிவு, பெண்களை வணிகப் பொருளாகப் பாவிப்பது முதலியவற்றை எதிர்த்து படைப்பாளிகள் தங்களின் எழுதுகோலை உயர்த்திட வேண்டுகோள் விடுத்தார்.

எண்ணத்தையும், எழுத்தையும் உயர்வாக மதித்தவர். எழுதுவதையும் சொல்வதையும் ஒன்றாக வாழ்ந்து காட்டியவர். சாதி, மன உணர்வுகளுக்கு அப்பாற்பட்டவர். இளம் எழுத்தாளர்களையும் படைப் பாளர்களையும் ஊக்கப்படுத்தி, ஆதரவளித்தவர். தமிழ் இலக்கிய உலகில், `இலக்கிய பீஷ்மர்', `இலக்கிய ரிஷி' எனப் போற்றப்பட்டவர்.

வல்லிக்கண்ணன் சென்னையில் வாழும்போது நிமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 09.11.2006-அன்று தமது 86ஆவது வயதில் மறைந்தார்.

வல்லிக்கண்ணன்

புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்

https://daily.navinavirutcham.in/?p=25227
https://amarkkalam.forumta.net/t14009p25-topic

‘புதுக்கவிதை’ என்ற பெயர் அநேகருக்குப் பிடிக்கவில்லை, இந்தப் பெயரைக் கண்டு பலர் மிரளுகிறார்கள். கேலி செய்ய வேண்டும் என்ற தூண்டுதலை இது சிலருக்கு ஏற்படுத்துகிறது. இதன் உருவத்தையும் உள்ளடக்கத்தையும் பார்த்துக் குழப்பம் அடைகிறவர்கள் பலர். காலவேகத்தில் கவிதைத்துறையில் இயல்பாக ஏற்பட்ட ஒரு பரிணாமம் இது. தமிழ்க் கவிதையில் மறுமலர்ச்சி பெற்ற இப்புதுமைக்கு ‘புதுக்கவிதை’ எனும் பெயர் 1960 களில் தான் சேர்ந்தது ‘நியூ பொயட்ரி’ என்றும், ‘மாடர்ன் பொயட்ரி’ என்றும் ஆங்கிலத்தில் கூறப்படுவதை ஒட்டி, தமிழில் ‘புதுக்கவிதை’ என்ற பெயர் இம்முயற்சிக்கு இடப்பட்டது. ஆயினும் ஆரம்பத்தில், யாப்பு முறைகளுக்கு கட்டுப்படாமல், கவிதை உணர்வுகளுக்கு சுதந்திரமான எழுத்து உருவம் கொடுக்கும் இப்படைப்பு முயற்சி ‘வசன கவிதை’ என்றே அழைக்கப்பட்டது. பின்னர், ‘யாப்பில்லாக் கவிதை’, ‘இலகு கவிதை’, ‘கட்டில்டங்காக் கவிதை’ (Free Verse) போன்ற பெயர்களை இது அவ்வப்போது தாங்க நேரிட்டது. புதுக்கவிதை என்பதில் மிரட்சிக்கோ பரிகாசத்துக்கோ, குழப்பத்துக்கோ எதுவும் இடம் இல்லை.

முன்பு பழக்கத்தில் இருந்து வருகிற-மரபு ரீதியாக அமைந்த-ஒன்றிலிருந்து மாறுபட்டு (அல்லது அதை மீறித்) தோன்றுவது புதுசு (புதிது). மரபு ரீதியான, யாப்பு இலக்கணத்தோடு ஒட்டிய கவிதைகளிலிருந்து மாறுபடும் இக்கவிதைப் படைப்பு புதுக்கவிதை எனப் பெயர் பெற்றது பொருத்தமேயாகும். பார்க்கப்போனால், கவி சுப்பிரமணிய பாரதி தனது எல்லாக் கவிதைகளையுமே ‘புதுக்கவிதை’ என்றுதான் குறிப்பிடுகிறார்-

அந்நாள் வரை இருந்து வந்த தமிழ்க் கவிதைகளிலிருந்து அவை மாறுபட்ட தன்மைகளைப் பெற்ற படைப்புகளாக விளங்கியதால்,

‘சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது,
சொற்புதிது, சோதிமிக்க
நவகவிதை’

என்று பாரதியார் தன் கவிதைகளைப் பற்றிப் பெருமையோடு பேசுகிறார். தனது கவிதா உணர்வுகளையும் உள்ளத்தின் எழுச்சிகளையும், கனவுகள் கற்பனைகள் எண்ணங்கள் அனைத்தையும் மரபு ரீதியான யாப்பு முறைகளுக்கு உட்படும்-கவிதைகளின் விதம் விதமான வடிவங்களில் வெளிப்படுத்திய கவிபாரதி, இலக்கணத்துக்கு உட்படாத புதிய வடிவத்திலும் உருக்கொடுக்க முயன்று வெற்றியும் கண்டார். அதுதான் ‘காட்சிகள்’ என்ற வசன கவிதைத் தொகுப்பு. பாரதி தன் எண்ணங்களை எழுத்து ஆக உருவாக்குவதற்குப் பல சோதனைகளில் ஆர்வம் கொண்டிருந்தார் என்பது அவரது படைப்புகளை ஆராய்வோருக்குப் புரியும். கவிதைகளில் பல சோதனைகள் செய்தது போலவே, வசனத்தில் தராசு, ஞானரதம், நவதந்திரக் கதைகள் போன்ற புதிய முயற்சிகளை அவர் செய்திருக்கிறார். அதே தன்மையில், வசனத்தை மீறிய, ஆயினும் கவிதையின் பூரணத்துவத்தை எய்தாத ஒரு முயற்சியாக அவர் படைத்துள்ள வசன கவிதைகளே ‘காட்சிகள்’. எனவே, கவி சுப்பிரமணிய பாரதிதான் தமிழ்ப் ‘புதுக்கவிதை’யின் தந்தையாவார். பாரதியின் ‘காட்சிகள்’ வசனம்தான்; அவரது படைப்புகளைத் தொகுத்துப் பிரசுரித்தவர்கள் தவறுதலாக அவற்றையும் கவிதைகளோடு இணைத்து, வசன கவிதை என்று வெளியிட்டுவிட்டார்கள் என்று அந்தக் காலத்தில் ஒரு சிலர் எதிர்க்குரல் கொடுத்தது உண்டு. பாரதி ‘காட்சிகள்’ என்ற தலைப்பில் எழுதியிருப்பது வெறும் வசனம் அல்ல. தவறுதலாகக் கவிதைத் தொகுதியில் இடம் பெற்றுவிட்ட வசன அடுக்குகள் என்று அதைக் கொள்வதும் சரியாகாது. என்றோ எழுதப்பட வேண்டிய கவிதைச் சித்திரங்களுக்காக அவ்வப்போது குறித்து வைக்கப்பட்ட துணுக்குகள் என்று மதிப்பிடுவதும் பொருந்தாது. பாரதியின் கட்டுரைகள் என்ற பெயரில் துண்டு துணுக்குகள், எண்ணச் சிதறல்கள் பற்பல காணப்பட்ட போதிலும், ‘காட்சிகள்’ முழுமைபெற்ற-நன்கு வளர்க்கப்பட்ட-சிந்தனைக் கட்டுமானங்களாகவும், சொல் பின்னல்களாகவுமே அமைந்துள்ளன.

தனது எண்ணங்களுக்கும், அனுபவங்களுக்கும், உணர்ச்சிகளுக்கும் வெவ்வேறு விதமான வடிவங்கள் கொடுக்க ஆசைப்பட்ட பாரதிக்குக் கவிதை 'தொழில்'; இதயஒலி; உயிர் மூச்சு. என்றாலும், கவிதை சில சமயங்களில் சக்தியை இழந்து விடுகிறது. வசனம் அநேக சமயங்களில் கவிதையை விட அதிகமான வலிமையும் அழகும் வேகமும் பெற்று விடுகிறது. இதை பாரதியே உணர்ந்திருக்கிறார். இதற்கு 'பாஞ்சாலி சபதம்' நெடுங்கவிதையில் வருகிற 'மாலை வருணனை' எனும் கவிதைகளும், பாரதி எழுதியுள்ள 'ஸூர்யாஸ்தமனம்' என்ற வசனப் பகுதியும் நல்ல எடுத்துக்காட்டு ஆகும். ஆகவே அவர் 'வசன கவிதை' என்ற புதிய சோதனையை மேற்கொண்டார்.மேலும் பாரதி 'வடிவம்' (Form) பற்றி தெளிவாக சிந்திக்கிறார் என்று கொள்ள வேண்டும். 'வசனகவிதை'யில் வருவது இது-

"என் முன்னே பஞ்சுத் தலையணை கிடக்கிறது.
அதற்கு ஒரு வடிவம், ஓரளவு ஒரு நியமம்
ஏற்பட்டிருக்கின்றது
இந்த நியமத்தை, அறியாதபடி சக்தி
பின்னே நின்று காத்துக் கொண்டிருக்கிறாள்.
மனிதஜாதி இருக்குமளவும் இதே தலையணை
அழி வெய்தாதபடி காக்கலாம்.
அதனை அடிக்கடி புதுப்பித்துக் கொண்டிருந்தால்
அந்த வடிவத்திலே சக்தி நீடித்து நிற்கும்,
புதுப்பிக்கா விட்டால் அவ்வடிவம் மாறும்,
வடிவத்தைக் காத்தால்,
சக்தியை காக்கலாம்;
அதாவது, சக்தியை அவ்வடிவத்திலே காக்கலாம்;
வடிவம் மாறினும் சக்தி மாறுவதில்லை
எங்கும், எதனிலும், எப்போதும் எல்லா விதத்
தொழில்களும் காட்டுவது சக்தி.
வடிவத்தைக் காப்பது நன்று, சக்தியின் பொருட்டாக.
சக்தியைப் போற்றுதல் நன்று வடிவத்தைக் காக்குமாறு.
ஆனால் வடிவத்தை மாத்திரம் போற்றுவோர்
சக்தியை இழந்து விடுவர்." ('சக்தி')

பாரதி தன்னுள் லீலைகள் புரிந்த சக்தியைப் போற்றினார். சக்தியை விதவிதமான வடிவங்களில் துதித்தார். பாம்புப் பிடாரன் பற்றி பாரதி கூறுவது அவருக்கும் பொருந்தும்.

"இஃது சக்தியின் லீலை,
அவள் உள்ளத்திலே பாடுகிறாள். அது

குழலின் தொளையிலே கேட்கிறது.
பொருந்தாத பொருள்களைப் பொருத்திவைத்து
அதிலே இசையுண்டாக்குதல் — சக்தி”

இப்படி ‘பொருந்தாத பொருள்களைப் பொருத்தி வைத்து அதிலே இசையுண்டாக்கும்’ முயற்சிதான் பாரதியின் வசனகவிதைப் படைப்பு ஆகும்.

“கருவி பல, பாணன் ஒருவன்.
தோற்றம் பல, சக்தி ஒன்று.”

பாரதி என்னும் பாணன், தன்னுள் ஜீவனுடன் பிரவாகித்துக் கொண்டிருந்த சக்திக்கு புறத்திலே பலப்பல தோற்றங்கள் கொடுக்க விரும்பியபோது அவருக்குப் பயன்பட்ட கருவிகள் பல. முக்கியமானது கவிதை. வசனமும் வசன கவிதையும் பிற.

பாம்புப் பிடாரன் குழல் ஊதும் ஆற்றலை பாரதியின் வசன கவிதைச் சொல்லமைப்புக்கு ஒப்பிடலாம். பாரதி சொல்கிறார்:

“இதோ பண்டிதன் தர்க்கிப்பது
போலிருக்கின்றது.
ஒரு நாவலன் பொருள் நிறைந்த
சிறிய சிறிய வாக்கியங்களை
அடுக்கிக் கொண்டு போவது போலிருக்கிறது,
இந்தப் பிடாரன் என்ன வாதாடுகிறான்?
... பல வகைகளில் மாற்றிச் சுருள் சுருளாக
வாசித்துக் கொண்டு போகிறான்.”

பாரதியின் வசனகவிதை முயற்சிகளும் ‘பொருள் நிறைந்த சிறிய சிறிய வாக்கியங்களை அடுக்கிக் கொண்டு போவதும்’ பல வகைகளில் மாற்றிச் சுருள் சுருளாக’ வாசிப்பதும் ஆகத்தான் அமைந்துள்ளன. இந்த விதமான ‘வசனகவிதைப்’ படைப்பில் ஈடுபட வேண்டும் என்ற ஆசை பாரதிக்கு ஏன், எப்படி ஏற்பட்டிருக்கக் கூடும் என்று இன்று சர்ச்சை செய்வது சுவாரஸ்யமான யூகங்களுக்கே இடமளிக்கும். எனினும், பேராசிரியர் பி.மகாதேவன் கூறியிருப்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு அபிப்பிராயமாகவே தோன்றுகிறது.
பாரதி ரவீந்திரநாத் தாகூருடன் போட்டியிடுவதில் ஆர்வம் காட்டினார்; தாகூரின் ‘கீதாஞ்சலி’ மாதிரி அவரும் இதை எழுதினார் என்று மகாதேவன்

சொல்லியிருக்கிறார்.

தாகூரின் ‘கீதாஞ்சலி’ முதலிய படைப்புகளை ரசித்த பாரதி அவற்றைப்போல் வசனகவிதை படைக்க முன்வந்திருக்கலாம். அக்காலத்தில் அவருக்கு வால்ட் விட்மனின் ‘லீவ்ஸ் ஆவ் கிராஸ்’ பாடல்களும் அறிமுகமாகி இருந்தன. மேலை நாட்டு நல்ல கவிஞர்களின் திறமையை அறிந்து கொள்ளத் தவறாத பாரதி விட்மனையும் அறிமுகம் செய்து கொண்டிருந்தார். இதற்கு பாரதியின் கட்டுரையில் சான்று கிடைக்கிறது. வால்ட் விட்மன் பற்றி பாரதி இவ்வாறு எழுதியிருக்கிறார்- “வால்ட் விட்மன் என்பவர் சமீப காலத்தில் வாழ்ந்த அமெரிக்கா (United States) தேசத்துக்கவி. இவருடைய பாட்டில் ஒரு புதுமை என்னவென்றால், அது வசனநடை போலேதான் இருக்கும். எதுகை, மோனை, தளை ஒன்றுமே கிடையாது. எதுகை மோனையில்லாத கவிதைதான் உலகத்திலே பெரிய பாஷைகளில் பெரும் பகுதியாகும். ஆனால், தளையும் சந்தமும் இல்லாத கவிதை வழக்கமில்லை. வால்ட் விட்மான், கவிதையை பொருளில் காட்ட வேண்டுமே யல்லாது சொல்லடுக்கில் காட்டுவது பிரயோஜனமில்லை யென்று கருதி ஆழ்ந்த ஓசை மாத்திரம் உடையதாய் மற்றப்படி வசனமாகவே எழுதிவிட்டார். இவரை ஐரோப்பியர், காளிதாஸன், கம்பன், ஷேக்ஸ்பியர், மில்டன், தாந்தே, கெத்தே முதலிய மகாகவிகளுக்கு ஸமான பதவியுடையவராக மதிக்கிறார்கள். குடியாட்சி, ஜனாதிகாரம் என்ற கொள்கைக்கு மந்திர ரிஷிகளில் ஒருவராக இந்த வால்ட் விட்மானை ஐரோப்பிய ஜாதியார் நினைக்கிறார்கள். எல்லா மனிதரும், ஆணும் பெண்ணும் குழந்தைகளும், எல்லாரும் ஸமானம் என்ற ஸத்யத்தை பறையடித்த மஹான்களில் இவர் தலைமையானவர்.” புல்லையும் மண்ணையும் நீரையும் மனிதர்களையும் நாடுகளையும் உற்சாகத்தோடு பாடிப் பெருமைப்பட்ட விட்மனைப் போல பாரதியும் காற்றையும் கயிற்றையும் மணலையும் விண்ணின் அற்புதங்களையும் மண்ணின் மாண்புகளையும் போற்றி, ‘பொருள் நிறைந்த சிறிய சிறிய வாக்கியங்களை அடுக்கி’ தர்க்கித்துக் கொண்டு போக விரும்பியிருக்கலாம். பாரதத்தின் பழங்கால ரிஷிகளைப் போல, உபநிஷத் கர்த்தாக்களைப் போல பாரதியும் ஒளியை, வெம்மையை, சக்தியை, காற்றை, கடலை, ஜகத்தினைப் போற்றிப் புகழ இப்புதிய வடிவத்தைக் கையாண்டிருக்கலாம். அது எவ்வாறாயினும், தமிழுக்குப் புதிய வடிவம் ஒன்று கிடைத்தது. பாரதியின் வசனகவிதை இனிமை, எளிமை, கவிதை மெருகு, ஓட்டம்

எல்லாம் பெற்றுத் திகழ்கிறது. இதற்கு ஒரு உதாரணமாகப் பின் வருவதைக் குறிப்பிடலாம்.

“நாம் வெம்மையைப் புகழ்கின்றோம்,
வெம்மைத் தெய்வமே ஞாயிறே, ஒளிக்குன்றே,
அமுதமாகிய உயிரின் உலகமாகிய
உடலிலே மீன்களாகத் தோன்றும்
விழிகளின் நாயகமே
பூமியாகிய பெண்ணின் தந்தையாகிய காதலே,
வலிமையின் ஊற்றே, ஒளி மழையே, உயிர்க்கடலே,
சிவனென்னும் வேடன் சக்தியென்னும்
குறத்தி உலகமென்னும் புனங்காக்கச்
சொல்லி வைத்து விட்டுப் போன விளக்கே,
கண்ணனென்னும் கள்வன் அறிவென்னும்
தன்முகத்தை மூடி வைத்திருக்கும்
ஒளியென்னும் திரையே.
ஞாயிறே, நின்னைப் பரவுகின்றோம்.” (ஞாயிறு புகழ்)

இது வெறும் வசனம்தானா? இல்லை, இது கவிதைதான் என்று எப்படிச் சொல்ல முடியும்?

வசனத்தின் வறண்ட, அறிவு பூர்வமான சாதாரண இயல்பை மீறியது. கவிதையின் தன்மையைப் பூரணமாகப் பெறாதது. எனவேதான் ‘வசனகவிதை’ என்று பெயர் பெறுகிறது.

வல்லிக்கண்ணன்: உழைப்பில் நின்ற ஒருவர்!

https://thaaii.com/2023/11/13/script-about-vallikannan/

வல்லிக்கண்ணன் பற்றி பழ. அதியமானின் கட்டுரை

வல்லிக்கண்ணனின் லௌகீக வாழ்க்கை ஏற்றத் தாழ்வற்ற, வளமற்ற வாழ்க்கை. ஆனால் இலக்கிய வாழ்க்கை அப்படி அல்ல. ‘கோயில்களை மூடுங்கள்!’, ‘அடியுங்கள் சாவு மணி’, ‘எப்படி உருப்படும்?’, ‘கொடு கல்தா?’... இதெல்லாம் கோபம் பொங்க, ‘கோரநாதன்’ என்ற புனைபெயரில் அவர் எழுதிய இளம் வயது நூல்கள். ‘நையாண்டி பாரதி’ என்ற புனைபெயரும் அவருக்குண்டு.

‘கல்யாணத்துக்குப் பிறகு காதல் புரியலாமா?’ ‘கல்யாணம் இன்பம் கொடுப்பதா? இன்பத்தைக் கெடுப்பதா?’ என்ற பட்டிமன்ற பாணி நூல்களும், ‘செவ்வானம்’, ‘விடிவெள்ளி’ என்ற தலைப்பில் நூல்களும் அவர் வாழ்க்கையின் நடுப்பாகத்தில்

எழுதியவை. சிறுகதை, நாவல், கவிதை எனத் தொடர்ந்தது இவ் விடைக்கால எழுத்து வாழ்க்கை.

பின்னால் இறுதிக் கால வாழ்க்கை திறனாய்வு, சிறுபத்திரிகை, புதுக் கவிதை வரலாறு என்ற நிலையை அடைந்தது. கோபம் பொங்கிய காலம் அவர் துறையூரில் கிராம ஊழியனில் பணிபுரிந்த காலம் (1948 வரை). பின்னர் சென்னைக்கு வந்து, ஹனுமானில் பணியாற்றத் தொடங்கியது முதல் சென்னைக்கும் ராஜவல்லிபுரத்துக்கும் நாடாறு மாதம் காடாறு மாதமாக வாழ்ந்த காலப் பகுதி, (1979 வரை) அவரது இடைக்காலம்.

அதாவது ஏறக்குறைய 60 வயதுவரை; பிறகு சென்னையிலேயே தங்கிவிட்ட சாகித்திய அகாதெமி விருதுக்குப் பின்னான இறுதிக் காலம்.

கோபம் பொங்கி எழும் எழுத்தாளனாக உருவாகத் தொடங்கி, படைப்பியக்கத்தின் வளர்ச்சியில் நிதானத்துக்கு வந்த படைப்பாளியாக வளர்ந்து இறுதிக் கட்டத்தில் ஒரு விமர்சகனாகியது வல்லிக்கண்ணனின் இலக்கியப் பரிணாமம்.

(கோபம் பொங்கி வழிந்த காலத்தில்) திராவிட இயக்கத்தவரும் (நிதானம் கைக்கு ஏறிய காலத்தில்) சினிமாக்காரர்களும் அவரைத் தம்முள் இழுத்துக்கொள்ள முயன்றதாகவும் அதிலிருந்து தான் தப்பிவிட்டதாகவும் வல்லிக் கண்ணன் நினைத்திருந்தார்.

முதல்கட்டமான ‘துறையூர்’ காலத்திலேயே 30 வயதிற்குள் ஏறக்குறைய 25 நூல்கள் வெளிவந்துவிட்டன. 26ஆம் வயதிலும் 28ஆம் வயதிலும் மட்டும் ஐந்து நூல்கள் (1946, 1948) வெளியாயின. இடைக்கால, சென்னை இராஜவல்லிபுரம் (60 வயதிற்குள்) வாழ்வில் மேலும் 20 நூல்கள் பதிப்பைக் கண்டிருக்கின்றன. மீதி 30 நூல்கள் அவரது இறுதி, சென்னை வாழ்வில் வந்தவை. 1991-ல் மட்டும் ஏழு நூல்கள். மொத்தம் 75 நூல்களை, தன் 86 வயதுக் காலத்தில் அவர் எழுதியுள்ளார்.

இதில் இரண்டு நூல்கள் தன் வாழ்க்கை வரலாற்று நூல்கள். இரண்டு பாகம் அல்ல, இரண்டு நூல்கள். அவரது வாழ்க்கை வரலாற்றை மு. பரமசிவம் எழுதியதும் அ.நா. பாலகிருஷ்ணன் தொகுத்ததும் வேறு.

எந்த நவீனத் தமிழ் எழுத்தாளருக்கும் இப்படி நூல்கள் வந்தனவா என்று தெரியவில்லை. ஆனாலும், வல்லிக் கண்ணனின் கனவுத் திட்டத்தில் இன்னும் எழுத வேண்டிய இரண்டு நாவல்கள் பாக்கி இருந்ததாகத் தெரிகிறது.

பி.எஸ். செட்டியாரின் சினிமா உலகம் (கோவை), சக்திதாசன் பொறுப்பில் வந்த நவசக்தி (சென்னை), அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் நடத்திய கிராம ஊழியன் (துறையூர்), பிறகு ஹனுமான் (சென்னை) ஆகிய சிறுபத்திரிகைகளிலும் அவர் பொறுப்பேற்று இயங்கியிருக்கிறார்.

தனது இளமைக் கால வாழ்க்கையில் இலக்கிய நடவடிக்கை எல்லாவற்றிலும் பங்கு பெற்றவராகவே வல்லிக் கண்ணன் இருந்திருக்கக்கூடும். பாரதி பாடல் பொதுவுடமைக்காகப் போராடிய ‘பாரதி விடுதலைக் கழக’த்தில் (1948) வ.ரா.

முதலியவர்களோடு இணைந்து போராடியிருக்கிறார். 60 ஆண்டுக் காலம் (40கள் முதல்) சிறுபத்திரிகைகளுடனும் சிறுபத்திரிகை எழுத்தாளர்களுடனும் தொடர்பில் இருந்தார்.

சிறு பத்திரிகைகளின் வரலாற்றை அவற்றின் உள் விவகாரங்களோடு அறிந்தவர் அவர். வாசகர்கள், வளரும் எழுத்தாளர்கள் ஆகியோருக்குத் தொடர்ந்து கடிதம் எழுதும் வழக்கத்தைக் கைக்கொண்டவர்.

கடும் உழைப்பைச் செலுத்தக்கூடியவர். தன்னை முன்னிறுத்திக்கொள்ளாதவர். இலக்கியச் சர்ச்சைகளில் மௌனம் காப்பவர். அதிர்ந்து பேசாதவர்.

புதுமைப்பித்தனின் மேதமையை உணர்ந்து, அவருக்கு 'ஏகலைவ'னாகத் தன் நூல் ஒன்றை (குஞ்சாலாடு, 1946) அர்ப்பணித்தவர்.

எண்ணிக்கையில் 75 நூல்களை எழுதியிருந்தாலும் 'பாரதிதாசனின் உவமை நயம்' (1946), 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' (1977), 'சரஸ்வதி காலம்' (1986), 'பாரதிக்குப் பின் தமிழ் உரைநடை' (1981) ஆகியவை வல்லிக்கண்ணனின் வலிமை மிக்க அடையாளங்கள்.

சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், கட்டுரை என்று தமிழ் இலக்கியத்தின் எல்லா வகைமைகளிலும் முயன்று பார்த்திருக்கிறார். ந. பிச்சமூர்த்தியை அடியொற்றி 1940களிலேயே புதுக் கவிதை எழுதினார். கட்டுரை அவர் கைக்கு வந்து நின்றது.

ஆசிரியராகச் சில சிறுபத்திரிகைகளில் இருந்து பார்த்திருக்கிறார். சூட்டிகை அவரை ஏமாற்றியிருக்கக்கூடும். திருமணம் என்ற பந்தத்தை ஏற்காததன் மூலம் குடும்பம் என்னும் கவலை தரும் பிரச்சினையிலிருந்து தப்பித்துவிடலாம் என்று நினைத்தார்.

பேசுவதுபோலவே எழுத வேண்டும் என்று பாரதியார் வலியுறுத்திக்கொண்டே இருந்தார். அதை வல்லிக் கண்ணன் நேர் எதிர்த் திசையில் செயல்படுத்தினார். வல்லிக்கண்ணன் எழுதுவதுபோலவே பேசுவார். இலக்கிய நடை, வாக்கிய முடிப்பு, ஒருமை, பன்மை மயக்கமற்ற எழுத்து முறையே அவரது பேச்சு முறை. உணர்ச்சியை மறந்தும் கலந்துவிடாத வைராக்கியம் வல்லிக்கண்ணனுக்கு உண்டு.

ஒல்லிக்கண்ணன் என்று எழுத்தாள நண்பர்கள் தம் தனிப் பேச்சில் குறிப்பிடும்படி, தோல் மூடிய, எலும்புகள் தெரியும் ஒல்லியான தேகம் அவருடையது.

ஆனால், இலக்கியச் சில்லான் என்று கரிசல் பூமணி வர்ணிக்கும் படியான சுறுசுறுப்பான உசுப்பிராணி அவர். ஒற்றைச் சுற்று வேட்டி, அரைக் கைச் சட்டை, சராசரி உயரம், எளிமையும் அடக்கமுமான தோற்றம். ஊடகங்கள் உருவாக்கிக் காப்பாற்றும் எழுத்தாளன், அதுவும் ஏழைத் தமிழ் எழுத்தாளன் பிம்பத்திற்குப் பொருந்தும் உருவம் வல்லிக்கண்ணனுக்கு.

நடப்பு நூற்றாண்டின் நடுத்தர வர்க்க நவீனத் தமிழ் வாழ்க்கையை ஒரு பிரமச்சாரி எழுத்தாளராக வாழ்ந்து அதை இலக்கியத்தில் பதிவுசெய்தவராக வல்லிக்கண்ணனைக் கருதலாம்.

காணொளிகள்

01] **வல்லிக்கண்ணன் கதைகள்**
https://www.youtube.com/watch?v=fqKZVTFuRco [1:18:57]

02] **யாரைக் காதலித்தான்? | வல்லிக்கண்ணன் சிறுகதை**
https://www.youtube.com/watch?v=uLSuOctdh4U [21:57]

03] **புகழ்பெற்ற எழுத்தாளர்,சாகித்ய அகாடமி விருது பெற்றவர் வல்லிக்கண்ணன்**
https://www.youtube.com/watch?v=qkI9kmGHWuI [7:39]

04] **சிறப்புப் பரிசு | வல்லிக்கண்ணன் | சிறுகதை | ஒலிப்புத்தகம்**
https://www.youtube.com/watch?v=HI_o8L4vCmU [14:08]

05] **எழுத்தாளர் வல்லிக்கண்ணன் நூற்றாண்டு நிறைவு விழா**
https://www.youtube.com/watch?v=J7nbRy-V238 [2:37:45]

(😊)(😊) வல்லிக்கண்ணன் (😊)(😊)





